Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dialog டயலொக்

kit

எந்நேரமும் உன்னுடன்....

100/-,400/-,1000/- விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டு பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Sri Murugan
Tele Communication & Agency
Post Office,
303, K.K.S. Road, Jaffna.

T.P : 021 222 5392,
Fax : 021 222 3214
E.Mail : srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 08 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 23 (21.04.2006) வெள்ளிக்கிழமை இதழ் 203



# எப்ரல் 24 பேச்சில் பங்கேற்க முடியாது

## பௌயரிடம் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி —

தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவ அராஜகம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் சூழலில் - திட்டமிட்டபடி ஜெனிவா பேச்சுக்களில் பங்கேற்க முடியாதிருப்பதாக நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று கிளிநொச்சி வந்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரிடம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இவர்களைச் சந்தித்து பேசியிருந்தனர். இதன்போது புலிகள் தரப்பு நிலைப்பாடு நோர்வே அனுசரணையாளர்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அரச கட்டுப்பாட்டு பகுதியில் துணை ஆயுதக் குழுவினர்!

## அவுஸ்ரேலிய தொலைக்காட்சி அம்பலம்

கொழும்பு —

# சுழிபுரம் மீன்சந்தைக்குள் வியாபாரி சுட்டுக்கொலை!



சுழிபுரம் —

சுழிபுரம் - கல்லை வேம்படியில் நேற்றுக்காலை 9மணியவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுழிபுரம்- கல்லைவேம்படி மீன் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மேற்படி குடும்பஸ்தரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். துப்



கொழும்பு —

கிழக்கில் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதியில் கருணாகுழு என்ற பெயரில் செயற்படும் ஆயுதக்குழு ஒன்று உண்டு என்பதை அவுஸ்ரேலிய தொலைக்காட்சி நிறுவனம் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது.

அவுஸ்ரேலிய விசேட ஒளிபரப்புச் சேவை தயாரித்து வெளியிட்ட இலங்கை துணை ஆயுதக்குழுக்கள் தொடர்பான விபரணப்படத்திலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

அவுஸ்ரேலிய ஊடகவியலாளரான அரோன் லூயின்ஸ் என்பவர் கிழக்கில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கருணா குழுவின் முகாம் ஒன்றுக்கு நேரடியாக விஜயம் செய்து அங்குள்ளவர்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோர் தாக்குதல்களுக்கு புலிகளல்ல நாமே காரணம்!

## என்கிறது பொங்கியெழும் மக்கள் படை

யாழ்ப்பாணம் —

அப்பாவி தமிழ்மக்களை படுகொலை செய்வதால் ஆத்திரமடைந்த நாமே ஆக்கிரமிப்புப் படைகள் மீது கிளைமோர் மற்றும் கண்ணிவெடி தாக்குதல்களை நடத்தி வருகின்றோம்.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறோம் என யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை மாவட்ட கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ மக்களாகிய எம்மீது புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மாறாக படைகளும், ஒட்டுப்படைகளும் நான்கு வருட சமாதான காலத்தில் நடத்திய தாக்குதல்கள் காரணமாகவும், எம்மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் காரணமாகவும் மக்கள் படையாக நாம் ஆத்திரமுற்று படையினர் மீது தாக்குதல்களை நடத்தினோம்.

நிலைமை மோசமடைந்தது. எமக்கு வேறுவழி இல்லை. ஆனாலும் கடந்த ஜெனிவா பேச்சில் நம்பிக்கை கொண்ட நாம் எமது தாக்குதல்களை நிறுத்தியிருந்தோம். அத்துடன் நாம் தாக்கத் தொடங்கியபோது (12 ஆம் பக்கம் பார்க்க)

# லண்டனில் பாலாவுடன் நாளை பெளயர் சந்திப்பு

கொழும்பு —

நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பெளயரை நாளை லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலாசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று கிளிநொச்சிக்கு விடுதலைப் புலிகள் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு:ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பெளயர், பின்னர் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து ஒஸ்லோ திரும்பும் வழியில் நாளை லண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பெளயர் பேச்சு நடத்துவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



யாத நபர்கள் இருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். துப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் மட்டுநகரில் கொலை

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரில் ஈ.பி.டி.பி அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.45மணியளவில் நகரில் உள்ள சந்தையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரன் என்று அழைக்கப்படும் செல்லத்துரை சிவகுமார் (வயது 32) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

சந்தையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்தவேளை இவர் மீது நடாத்திய துப்பாக்கி சூட்டில் சம்பவ இடத்திலேயே (12 ஆம் பக்கம் பார்க்க)

# 2 இளைஞர்களின் சடலங்கள் வவுனியாவில் கண்டெடுப்பு!



கொழும்பு —

வவுனியா - மகா இறம்பைக் குளம் குட்டிநகர் பிரதேசத்தில் நேற்றுக் காலை வெட்டுக்காயங்களுடனும், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் இரு சடலங்கள் அப்பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்டன.

கொல்லப்பட்டோரின் முகங்கள் கறுப்புத்துணியால் கட்டப்பட் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2006 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட் டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2006 யூலை (MT) | 2006 ஓகஸ்ட் (MT) | 2006 செப்ரெம்பர் (MT) |
| 1 | சாவகச்சேரி | 70 | 70 | 70 |
| 2 | கைதடி | 30 | 30 | 30 |
| 3 | கொடிகாமம் | 80 | 80 | 80 |
| 4 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 5 | கட்டைவேலி - நெல்லியடி | 15 | 15 | 15 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 15 | 15 | 15 |
| 8 | மருதங்கேணி | 20 | 20 | 20 |
| 9 | யாழ்ப்பாணம் | 75 | 75 | 75 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பளை | 60 | 60 | 60 |
| 17 | சங்கானை | 50 | 50 | 50 |
| 18 | சுன்னாகம் | 50 | 50 | 50 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 20 | 20 | 20 |
| 21 | ஊர்காவற்துறை | 20 | 20 | 20 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதி யையோ கொள்வனவு செய்வது என்ப து தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500/- ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2006.04.24 ம் திகதி தொடக்கம் 2006.05.09 ம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
04. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500/- ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி - சிவப்பு நாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2006.05.10 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் 'சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல் வேண்டும்.
08. கேள்விதாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும், அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10%மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும்பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
20.04.2006. (சி/5272)

# ஆக்கிரமிப்பாளரை அகற்ற கிளர்ந்தெழுந்து வாருங்கள்

## கோப்பாய் இளையோர் ஒன்றியம் அறைகூவல்

கோப்பாய் —

கிளர்ந்தெழுந்து வாருங்கள் உரிமையை மீட்போம், ஆக்கிரமிப்பாளரை அடியோடு அகற்றுவோம் என்ற தலைப்பில் கோப்பாய் இளைஞர் ஒன்றியம் அறைகூவல் ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அன்பான எம் தேசத்தின் இளைய தலைமுறையே -

கலையும், கலாசாரமும், பண்பாட்டு விழுமியமும், அதனோடிணைந்த வீரமும் தமிழர் தம் மரபாகும். இதனைச் சீரழித்து அராஜகத்தையும், அடக்கு முறையையும் எம் மீது கட்டவிழ்த்துவிட்டு எமது இனத்தையே அழிக்க முற்பட்டவேளையில் அழிவிலிருந்து எம் இனத்தைக் காக்கவென திடசங்கற்பம் கொண்டு ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக உருவெடுத்த எங்களின் தலைவர், சிங்கள மண்பறிப்பாளர்களுக்கெதிராக களம் பல கண்டு வீரத்தையும், தியாகத்தையும் நிலைநாட்டிய பின்னர் சிங்களதேசம் சமாதான நல்லெண்ண முயற்சியை மேற்கொள்வதாகக் கூறி அதனூடாக கோரத்தாண்டவத்தை அரங்கேற்றியுள்ளது.

இதை உணர்ந்து கொண்டும், இனிமேலும் பொறுமைகாக்க முடியாது. எனவே, இளைய தலைமுறையே ஆயுதம் தாங்கி நிற்கும் இளைஞர்களோடு மோதமுடியாத சிங்கள இராணுவம் - நிராயுத பாணிகளான எங்களுடன் முட்டுவது ஏன்? தாக்கும் படைக்கு நாம் திருப்பி அடிக்க முனைந்தால் நிற்பானா எதிரி?

தலைவன் மடியில் தேவையான ஆயுதங்கள் உண்டு. துணிந்து எடுத்து சுழன்று அடித்தால் எம்முன் இந்த எதிரி நின்று பிடிக்க முடியாது. எனவேதான், பாசத்துக்குரிய எமது தேசத்து உறவுகளே படுகொலையின் உச்சம் உங்கள் வாசற்கதவைத் தட்டுகிறது. இதற்குப் பிறகும் சிந்திக்கிறீர்களா?

திருகோணமலையில் படுகொலை. சாவகச்சேரி கனகம்புளியடியில் படுகொலை. வலிகாமம் கிழக்கு புத்தூரில் இளைஞர்கள் படுகொலையென பகைவன் ஆயுதத்தால் அடக்க நினைத்து விட்டான்.

இந்தக் கொலைகள் வன்மையான கண்டனத்துக்குரியதும், எமது இனத்துக்கு சிங்கள காடையர்கள் விடுத்த சவாலுமாகும்.

எனவே,தயக்கமின்றி வாருங்கள் ஒன்றுபட்டு இவர்களுக்கு பதிலடி கொடுப்போம். அஞ்சி அஞ்சி, நாளுக்கு நாள் சாவதைவிட, இன்றே முடிவெடுங்கள், நாளை சிங்கள இனவாதப்பேய்களின் அராஜக கும்பலை செங்களத்தில் சந்திப்போம். காலம் தாழ்த்தாது விரைவாக வாருங்கள்.

இல்லையேல் கொடிய இராணுவ பூதங்களின் துப்பாக்கி ரவைகள் தொடர்ந்தும் உங்கள் உயிர்களைக் குடித்த வண்ணமே இருக்கும் என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தூர் இளைஞர் படுகொலைக்கு மாணவர் ஒன்றியம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

புத்தூர் பகுதியில் இராணுவ முகாமுக்கு மிக அருகில் ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையும், அண்மைய நாட்களில் திட்டமிட்டு பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

புத்தூர் பகுதியில் ஐந்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புத்தூர் பகுதியில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம், கடந்தவாரம் திருகோணமலையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்துக்குப் பின்னர் நடைபெற்ற படுமோசமான படுகொலைச் சம்பவமாகும். இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் இராணுவ முகாம் இருப்பதோடு, படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்பே - இந்தப் படுகொலையானது இடம்பெற்றுள்ளது.

இந்த மோசமான மனித நாகரீகமற்ற மிலேச்சத்தனமான படுகொலைச் சம்பவத்தால் இன்று யாழ்.குடாநாடே பதற்றம் நிறைந்ததாகவும், அச்சம் நிறைந்த சூழ் நிலையுமே நிலவுகிறது. இந்தத்தொடர்ச்சியான படுகொலைகள் எப்போதும் சமாதான முன்முயற்சிகளுக்கு துணை நிற்கப்போவதில்லை. மாறாக, யுத்த சூழ்நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
திருப்பதி
இரண்டாவது வெற்றி வாரம்

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

**ராஜா** யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத்,
மல்லிகா கபூர்
மற்றும் பலர்
நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

**நாதன்ஸ்**
எஸ்.ஜே.சூர்யா,
நயன்தாரா,
விவேக்
நடித்த

கள்வனின் காதலி
கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
பரத், சந்தியா
மற்றும் பலர் நடித்த
காதல்
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30


# யாழ்.பல்கலையில் "உப்பு" தமிழ் திரைப்படம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக் கழக திரைப்பட வட் டத்தினரது ஏற்பாட்டில் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு மேற்படி நிலையத்தில் ஆர்.செல்வராஜன் இயக்கத்தில் உருவான உப்பு எனும் தமிழ்த் திரைப்படம் அகன்ற திரையில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

துப்புரவுத் தொழிலாளரின் யதார்த்த வாழ்வைச் சித்தரிக்கும் இந்தப் படம் - பல விருதுகளையும், பாராட்டுதல்களையும் பெற்றதாகும்.

படக்காட்சியின் இறுதியில் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் - தொழில் நுட்ப பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதுடன், 16 - 22 வயதுக்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான பரீட்சைகள் தமிழ், சிங்கள மொழிகளில் கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நடைபெறும். (29)

## ஆன்மீக சொற்பொழிவு

தொண்டமனாறு —

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் இன்று காலை 10.30 மணி யளவில் பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## ஓய்வூதிய திகதி மாற்றம்

நெடுந்தீவு —

வைகாசி மாதத்துக்கான ஓய்வூதியம் வழங்கும் திகதி 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சகல பிரதேச செயலகங்களுக்கும் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதி 10 ஆம் திகதி புதன்கிழமையாவே அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தற்போது அந்தத் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக சகல ஓய்வூதியர்களும் அறியும் வகையில் சுற்றிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (113)

## இடமாற்றம்

சாவகச்சேரி —

உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக என்.லோகநாதன், வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரின் இடத்துக்கு தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த க.குமாரசாமி வலிகாமம் வலயத்துக்குச் சென்றுள்ளார் என்று தென்மராட்சி கல்வி வலயத்தினர் தெரிவித்தனர். (29)

# விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை புரிந்துகொள்ளமுடியவில்லையாம்!

## அமைச்சர் ரம்புக்வெல கூறுகிறார்



கொழும்பு—

ஜெனிவா பேச்சுக்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ளமுடியவில்லையென - அமைச்சரும், பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகருமான கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்றுமுன்தினம் அவர் கூறியதாவது:-

நோர்வே அனுசரணையாளர்களுடன் சாதகமற்ற நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் விதித்து வருகின்றனர். இருப்பினும் ஜெனிவா பேச்சுக்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கிவருகிறது.

ஜெனிவா பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்கமாட்டார்கள் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. திட்டமிட்டபடி ஜெனிவா பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் பங்கேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பின்னரும் ஏன் அவர்கள் புதிய வியாக்கியானங்கள் கூறுகின்றனர் என்று எமக்குப் புரியவில்லை.

அமைதி முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் ஈடுபாடு குறித்து கேள்வி எழுந்துள்ளது. நாட்டில் இனமோதலை உருவாக்கி அரச படையினர் மற்றும் அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடத்துகின்ற முயற்சியாகவே ஜெனிவா பேச்சுக்களில் பங்கேற்காமல் இருக்க விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்.

திருகோணமலை சந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால்தான் 1983 ஆம் ஆண்டைப்போன்ற இன வன்முறை உருவாக்கப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின்படி படையினர் பொறுமைகாத்து வருகின்றனர்.

ஏப்ரல் 7 முதல் 17 ஆம் திகதி வரை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 48 பேர் கொல்லப்பட்டனர். 55 பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த வாரங்களில் பொதுமக்கள் மீது - படையினர் தாக்குதல்களை நடத்தியதாகவும், அதற்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படுவதை நாம் நிராகரிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது உடனிருந்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க - விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதலை இராணுவம் நடத்தவில்லை. இத்தகைய தாக்குதல்களுக்காக ஆயுதக் குழுக்களுக்கு உதவவும் இல்லை என்றார்.

பொலிஸ் பேச்சாளர் ரெயின்சி பெரேரா கூறுகையில்:-

திருகோணமலையில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது நிலைமை 100 வீதம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றார்.

## அடுத்த கட்டப் பேச்சுக்களில் சர்வ கட்சிப் பிரதிநிதிகளும்!

கொழும்பு—

எதிர்வரும் ஜெனிவா பேச்சுவார்த்தையின்போது அனைத்து கட்சிகளதும் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகப் பங்கேற்கும் ஏற்பாடு குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த யோசனை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் -அரசாங்கம் தெரிவிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் முன்னர் சர்வகட்சி மாநாட்டில் பொதுத் தீர்மானம் எடுக்கப்படுவது வழக்கமாக இருந்துவந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் பேச்சுவார்த்தையின்போது சர்வ கட்சி பிரதிநிதிகளை அழைத்துச் செல்வது என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (01)

## நோர்வே விசேட தூதருடன் பாலித கொகன்ன சந்திப்பு!

கொழும்பு—

அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்னவை நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சிநிரல் உட்பட பல விடயங்கள் பற்றியே பேசப்பட்டதாகவும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் பாலித கொகன்ன தெரிவித்தார்.

புலிகளின் கிழக்குத் தளபதிகளை அழைத்து வருவதற்கு தனியார் ஹெலிகளைப் பயன்படுத்தலாம் என பௌயரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - கிளிநொச்சிப் பயணம் மற்றும் முதல் சுற்றுப் பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாதுவிடின் பேச்சுக்களில் கலந்துகொள்வதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

எனினும் விடுதலைப் புலிகள் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர்கள் ஜெனிவாவுக்கு வராது விடுவதற்கு சாக்குப் போக்குகளைக் கூறிக்கொண்டிருக்கக்கூடாது என்றும் பாலித கொகன்ன கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் தளபதிகள் பயணத்துக்கு விமானப் படையின் ஹெலி வழங்கப்படுமா எனக் கேட்டபோது அதனைப்பற்றி எதுவும் பேசப்படவில்லை என அவர் தெரிவித்தார். (01)

# விடுதலைப் புலிகளை ஆதரிப்பதால் தி.மு.கவில் இணையமாட்டேன்!

## என்கிறார் சு.ப.வீரபாண்டியன்



சென்னை—

தமிழீழ விடுதலைப் புலிகளை எப்பொழுதும் ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதால் தி.மு.கவில் இணையமுடியாதென, தமிழர் தேசிய இயக்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சு.ப.வீரபாண்டியன் தெரிவித்தார்.

தமிழக தேர்தலில் நடுநிலை வகிப்பது என்ற பழ.நெடுமாறனின் தலைமையிலான தமிழர் தேசிய இயக்கத்தின் முடிவை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான சு.ப. வீரபாண்டியன் ஏற்கவில்லை. இதையடுத்து அந்தக் கட்சியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்யவுள்ளதாகவும் சு.ப.வீரபாண்டியன் தெரிவித்தார்.

இதையடுத்து சென்னை அம்பத்தூரில் நேற்றுமுன்தினம் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து தென்னவன் கலைமன்றம் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சு.ப.வீரபாண்டியன், இயக்குனர் சீமான், கவிஞர் அறிவுமதி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்று சு.ப.வீரபாண்டியன் பேசியதாவது:-

பொடா என்னும் கொடூரச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டோரில் ஜெயலலிதாவை எதிர்க்கின்ற ஒற்றைக் குரலாக நான் பேசவந்திருக்கிறேன். ஜெயலலிதாவின் கொடுங்கோலாட்சி மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதற்காக நான் பேசவந்திருக்கிறேன்.

ஜூனியர் விகடன் ஏட்டில் ஒரு செய்தி வெளியாகியுள்ளது. எனக்கு வாகன வசதிகளையும், பெரிய பதவி ஒன்றையும் தி.மு.க.தரவுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

தந்தை பெரியாரின் தொண்டன் என்பதைவிட, தலைவர் நெடுமாறனின் நம்பிக்கைக்குரியவன் என்பதைவிட எனக்கு வேறு எந்தப் பதவியும் தேவையில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்னர் கலைஞரைச் சந்தித்து அரை மணி நேரம் உரையாடினேன். அப்போது அருகில் இருந்தவர்கள் தி.மு.க.வில் சேருகிறீர்களா என்று கேட்டனர்.

நான் பார்ப்பன எதிர்ப்பாளன், தமிழீழ விடுதலைப் புலிகளை எப்போதும் ஆதரிக்கின்றவன். இந்த இரண்டு கொள்கைகளோடு உள்ள நான். தி.மு.கவில் இணையமுடியாது. தி.மு.கவுக்கும் அது முடியாது என்று சொல்லிவிட்டேன்.

அதற்குப் பதிலளித்த கலைஞர் - எங்கிருந்தாலும் என்ன நீ இராமசுப்பையாவின் மகன். என் பிள்ளைதான் நீ என்று சொன்னார். இதைவிட பெரும்பதவி எனக்கு வேறு என்ன தேவை?

என்றைக்கும் தந்தை பெரியாரின் தொண்டனாகவும், தலைவர் நெடுமாறனின் நம்பிக்கைக்குரியவர்களாகவும் நானும், சீமானும், அறிவுமதியும் இருப்போம். பதவிகளை எதிர்பார்த்து செயற்படுபவர்கள் அல்ல நாங்கள் எனத் தெரிவித்தார்.

## கிளைமோர் தாக்குதலில் கொரிய பிரஜை காயம்!

வவுனியா—

வவுனியா - அளுத்கெட்டிகமவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொரிய நாட்டு வர்த்தகரான லான் லீ (வயது 51) படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த கொரிய வர்த்தகர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உயிருக்கு ஆபத்தில்லை என்று வவுனியா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி தென்னக்கோன் சம்பவம் தொடர்பாக கொரிய வர்த்தகரிடம் விசாரணை நடத்தினார்.

மகாகச்சக்கொடிய பகுதியைச் சேர்ந்த ஜயசிங்க என்பவருடன் இணைந்து லான் லீ கல்லுடைக்கும் தொழில் செய்து வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவரது வாகனச் சாரதி அனுரா நல்லபெரும கூறுகையில் -

வாகனத்தின் ரயர் வெடித்தாகவே முதலில் நினைத்தேன். அதன்பின்னர்தான் வாகனத்தின் அனைத்துக் கண்ணாடிகளும் நொருங்கியதையும் பார்த்ததாகத் தெரிவித்தார். இராணுவ வாகனத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் தவறுதலாக கொரிய வர்த்தகரின் வாகனம் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

## அமைச்சரவை மாற்றம் இம்மாத முடிவுக்குள்!

கொழும்பு—

அமைச்சரவை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் திருத்தியமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கமைய கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றுக்கு அமைச்சரவையில் இடம் தரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சும், மலையக மக்கள் முன்னணிக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு துறைமுக அபிவிருத்தி அமைச்சும் கிடைக்க வாய்ப்பிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளன. (01)

# சிவராம் கொலையாளிக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு—

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமை கொலைசெய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரை மே மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவல நீதிவான் உத்தரவிட்டார்.

கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள புளொட் அமைப்பின் ராணுவப் பொறுப்பாளர் சிறீஸ்கந்தராசா (பீற்றர்) என்பவரே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவர்.

சிவராம் கொலை தொடர்பாகச் சந் தேக நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வு பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் தெரிவித்தனர்.

கொலை தொடர்பாக துரிதகதியில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் குற்றப் புலனாய்வு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதிலும் சந்தேக நபர் பாதுகாப்புக்கருதி மன்றில் ஆஜராக்கப்படவில்லை. (01)

## கைக்குண்டு வீச்சில் இளைஞர் படுகாயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் குணம் குணசீலன் (வயது 17) என்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு - அரசடிச் சந்திக்கு அருகே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.40 மணியளவில் இனந்தெரியாதோரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

படுகாயமடைந்துள்ள குணசீலன் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்து ஆலயம் ஒன்றின் முன்பாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அரசடிச் சந்திப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் தலைமையகம் மற்றும் நிர்வாக அலுவலகங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## தனியார் ஹெலி பயணம் ஆபத்தானதென தெரிவிப்பு

கொழும்பு—

கிழக்கு மாகாண தளபதிகளை தனியார் உலங்கு வானூர்தியில் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்வது ஆபத்தானது என்று - விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியதாவது -

எமது மத்திய குழுக் கூட்டத்துக்காக கிழக்கு மாகாண தளபதிகளை கிளிநொச்சிக்கு தனியார் உலங்கு வானூர்தியில் அழைத்துச் செல்லலாம் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் நிராகரிக்கக்கூடும்.




அரச படையின் உலங்கு வானூர்தியில் செல்லாமல் தனியார் உலங்கு வானூர்தியில் செல்லும்போது அது தாழப் பறக்கும் நிலையில் - துணை இராணுவக் குழுவினர் அல்லது அரச படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடானது ஒரு தந்திராபோய உத்தியாகும் என அவர் தெரிவித்தார்.

# இரண்டாவது போட்டியில் வெற்றி தொடரை சமன்செய்தது இந்தியா







அபுதாபி

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக் கிடையே நேற்றுமுன்தினம் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய அணி 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி



ஷேவாக்கும், ராவிட்டும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இந்த ஜோடி அபாரமாக ஆடியது. ஆரம்பத்தில் மெதுவாக ஆடிய இந்த ஜோடி பின்னர், விரைவாக ஓட்டங் களைக் குவித்தது. ஸ்கோர் 138ஐத் தொட்டபோது முதலாவது விக்கெட் டாக 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங் கலாக 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக், சயிட் அப்ரிடியின் பந்தில் போல்டானார்.

அடுத்து டோனி களமிறங்கி, ராவிட்டுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். அந்தவேளை, 10 பவுண் டரிகள் அடங்கலாக 92 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட், மொகமட் அசீப் பின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து யுவராஜ் களமி றங்க, 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த டோனி, நவீட்-உல்-ஹசன் வீசிய பந்தில் போல்டானார்.


தொடர்ந்து ரெய்னா களமிறங்க, 10 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸரை விளாசி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த யுவராஜ், நவீட்-உல்-ஹசன் வீசிய பந்தை மொகமட் அசீப்பின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பதான் களமிறங்கினார். இறுதி ஓவரின் கடைசிப்பந்தில் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெய்னா ரன் அவுட்டனார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. பதான் 7 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்ட மிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் நவீட்-உல்-ஹசன் 2, அசீப், அப்ரிடி இருவரும் தலா ஓவ் வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. அந்த அணியின் மலிக்கும், பர்ஹத் தும் தொடக்க ஆட்டக்காரர்களாகக்




களமிறங்கினர். இதில் பர்ஹத் 8 ஓட்டங்களுடன் பதானின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமி ழந்தார்.

அடுத்து களமிறங்கிய அப்ரிடியை யும் (0) பதான் போல்டாக்கினார்.

அவரையடுத்து களமிறங்கிய யுனுஸ்கான் 5 ஓட்டங்களைப் பெற்று அகர்காின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மலிக்குடன், இன்ச மாம் இணைந்து கொண்டார். அந்தவேளை, 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த மலிக், பவாரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங் கிய மொகமட் யூசுப் 5, கம்ரன் அக் மல் 18, அப்துல் ரசாக் 1, நவீட்-உல்-ஹசன் 27 ஓட்டங்களுடன் ஆட்டமி ழுந்தனர்.

இந்தநிலையில் இப்திகார் களமி றங்க, 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங் கலாக 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த




இன்சமாம் - ரன் அவுட்டானார்.

இறுதியாக அசீப் களமிறங்க, 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த இப்திகார், ஶ்ரீசந்தின் பந்தில் போல்டானார்.

இதனால் 45.2 ஓவர்களில் 218 ஓட்டங்களை மட்டும் பாகிஸ்தான் அணி பெற்றதால், 51 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்றது.

அசீப் 1 ஓட்டத்தைப் பெற்று ஆட்ட மிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் பதான், பவார் தலா 3, ஶ்ரீசந்த், அகர்கர், ஹர்பஜன் மூவ ரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக ராவிட்டும், ஆட்டத்தொடர் நாயக னாக இன்சமாமும் தெரிவாகினர்.

2 போட்டிகளைக் கொண்ட இந் தத் தொடரில் முதல் போட்டியில் பாகிஸ்தானும், 2ஆவது போட்டியில் இந்தியாவும் வெற்றிபெற்றதனால், தொடர் 1:1 என சமனானது.

# ஜிலெஸ்பியின் இரட்டை சதத்துடன் அவுஸ்ரேலியா இனிங்ஸ் வெற்றி



சிட்டகொங்

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே சிட்டகொங்கில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டி யில் - அவுஸ்ரேலிய அணி 1 இனி ங்ஸ் மற்றும் 80 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம் பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களா தேஷ் அணி தனது முதல் இனிங்ஸில் 197 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி, வோன், மக்கில் மூவரும் தலா 3 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

தொ...ர்ந்து ஆடிய அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 581 ஓட் டங்களைப் பெற்றது. இதில் ஜிலெஸ்பி அபாரமாக ஆடி ஆட்டமிழக்காமல் தனது முதலாவது இரட்டைச் சதத் தையும் (201), ஹூசே 182 ஓட்டங் களையும் பெற்றனர்.

அடுத்து தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 304 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 1 இனிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி பெற்றிபெற்றது.

இதில் அதிகபட்சமாக நபீஸ் 79, ரபீக் 65 ஓட்டங்களைப் பெற்றனர்.



பந்துவீச்சில் வோன் 5, மக்கில் 4, விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

2 போட்டிகளைக் கொண்ட இந்தத்



தொடரை 2:0 என்ற அடிப்படையில் அவுஸ்ரேலியா முழுமையாகக் கைப் பற்றியது.

## விளையாட்டு

# உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அவாய் மனோகரா விை-ளயாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரு கிறது.

இதில் இன்று மாலை 3.30 மணி க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கர வைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழகமும்,

மாலை 4.30 மணிக்கு நடைபெற வுள்ள மற்றைய ஆட்டத்தில் இமை யாணன் மத்திய விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து சென்.தோமஸ் விளை யாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

***தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் கோதுமை மா வழங்கலுக்கான***

***கேள்வி கோரல் - யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் - 2006***

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாணரத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மா பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்கவேண்டிய மாதம் | அளவு |
|---|---|
| 2006 யூலை | 400 Mt |
| 2006 ஓகஸ்ட் | 400 Mt |
| 2006 செப்ரெம்பர் | 400 Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத் தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவ ணங்களையும் 2006.04.24 ஆம் திகதி தொடக்கம் 2006.05.09 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலு வலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப் பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்தல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ /தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர் வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காள ரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2006.05.10 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றையதினம் பி.ப 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி சமுக மளிக்க முடியும்.

4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி” என எழுதப் படவேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்டச் செயலகம்,**
**யாழப்பாணம்.**
**20-04-2006**

[C/5271]

## முதலாம் திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம் ——

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் மாதம் ஒரு கோயில் மாதம் ஒரு முறை என்ற வகையில் நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி பன்னிரு திருமுறை முழுவதையும் முற்றோதி வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் ஆலயங்கள் தோறும் சென்று நடத்திவரும் இந்த நிகழ்வில் - யாழ்ப்பாணம் வண். கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரக்த்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய அறங்காவலரின் அனுசரணையுடன் சித்திரைமாதம் முழுவதும் முதலாந் திருமுறை முற்றோதல் நடைபெற்று வருகிறது.

இந்த ஆலயத்தில் வைரவர் கோயில், மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியவை ஒரு தனிநபரின் உபயமாகத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ——

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு பகுதிக்குள் மீள் குடியேற்றம் மற்றும் விவசாயச் செய்கையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சிறுவர்கள் சகல வளமும் பெற்றவர்களாக பராமரிப்பது சமூகத்தின் பொறுப்பாகும்

## ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ——

இறைவன் எல்லோருக்கும் எல்லா வசதிகள், வாய்ப்புக்கள், கொடைகள், அந்தஸ்த்துக்களைக் கொடுப்பதில்லை. சிலர் அனைத்தையும் பெற்று சீரும் சிறப்புமாக சௌபாக்கியங்களோடு வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால், சிலரின் வாழ்க்கையில் இறைவனே சோதனையைக் கொடுத்துள்ளான்.

அப்படிப்பட்ட மனிதர்கள், குழந்தைகளை சகல செல்வங்களையும் பெற்றவர்களால் பாதுகாப்பது, பராமரிப்பது சமூகப் பொறுப்பாகும். அந்த வகையிலேயே சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பலரின் கற்பனை வடிவம் இன்று செயல்ரீதியாகக் கட்டட வடிவமாகக் காட்சி கொடுக்கிறது என்றால் அதற்கு உள்ளூர் அன்பர்களோடு, வெளிநாடுகளில் வாழும் கொடை வள்ளல்களின் பாரிய பங்களிப்பே காரணமாகும் - இவ்வாறு கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் புதிய மாடிக்கட்டடத் திறப்பு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித் தார்.

தலைமையுரையில் ஆறு.திருமுருகன் தொடர்ந்து கூறும்போது -

தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படாத போக்குவரத்து வசதிகள், தொடர்புசாதன வசதிகள் இல்லாத கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர், சடையம்மா போன்ற பெரியார்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியிலும் பிடியரிசி சேகரித்து அதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவை புரிந்தார்கள்.

அவர்கள் செய்த சேவை காரணமாகவே இன்றும் நாம் சீரிய வாழ்க்கை வாழ முடிகிறது. அவர்களின் அந்தக் கால சேவையுடன் ஒப்பிடும்போது நாம் இன்று புரியும் பணி மிகச்சிறிது.

இரண்டு வருடங்களுக்கு முன் இந்தப் பாடசாலையை ஆரம்பித்த போது 11 பிள்ளைகள் இருந்தார்கள். இன்று 104 பிள்ளைகள் தமது மனோநிலையை மேம்படுத்துவதற்காக இங்கு வந்துள்ளார்கள். இவர்களை நாம் சமூகத்தில் இருந்து ஒதுக்கிப் பார்க்கக்கூடாது. அவர்களும் சமூகத்தால் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் தாம் எந்த வகையிலும் புறக்கணிக்கப்படவில்லை என நினைப்பதற்குமாக இங்கே கணினி வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்றார்.

சிறப்பு விருந்தினராக லண்டனிலிருந்து வருகை தந்த வே.சிவசுந்தரம் சிறப்புரையாற்றும் பொழுது நாம்வேறு நாட்டில் வாழ்ந்தாலும் எமது தாய் நாட்டு உடன் பிறப்புக்களை மறந்து விடமுடியாது. அவர்களின் இன்பதுன்பத்தில் நாமும் பங்குகொள்ள வேண்டுமென்பதற்காக மிகுந்த சிரமப்பட்டு நானும் திருமுருகனுமாகப் பல நாடுகளுக்குச் சென்று நிதி சேகரித்தோம்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னர் சோதனைகள் தீவிரமடைந்தன. அதிலே நாமும் விதிவிலக்கல்ல. எமது உறவுகளுக்காக பல சோதனைகள் வேதனைகளை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்ற மனத் துணிவுடன் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழருக்கு இங்குள்ள பிள்ளைகளின் தேவைகள் பற்றிக் கதைத்து அவர்களின் உதவிகளைப் பெற்றோம் எனக் கூறினார். (101)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை நான்கு



பெயர் : சி.கோபிராஜ்
முகவரி : சங்கானை.

### அகவை எட்டு



பெயர் : செ.வினோதினி
முகவரி : வல்வெட்டித்துறை.


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ............
முகவரி ............
பிறந்த ஆண்டு ............
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
............
பெற்றோர் ஒப்பம்


## யாழ்.பல்கலையில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம் ——



நாட்டுப்பற்றாளர் தியாகதீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாவீரர் நினைவுத் தூபியடியில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -பொதுச் சுடரை கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி தேவ ராஜா ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக்கொடியை உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன் ஏற்றினார். ஈகச்சுடரை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெயந்தன் ஏற்றினார். அன்னைபூபதியின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையைப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ் அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரையைக் கலைப்பீடாதிபதி இரா. சிவச்சந்திரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் - பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## மீட்கப்படாத நகைகள் ஏலவிற்பனைக்கு

யாழ்ப்பாணம் ——

இலங்கை வங்கிக் கிளைகளில் 30.06.2005 ஆம் திகதிவரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளதாக இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மேற்தரக் கிளை, யாழ். இரண்டாம் கிளை ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை, மானிப்பாய், சுன்னாகம், திருநெல்வேலி ஆகிய இலங்கை வங்கி கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை 28.04.2006 ஆம் திகதி வரை மீட்கமுடியும் எனவும், ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை இலங்கை வங்கிக்கு மட்டும் உள்ளது எனவும் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## கத்தோலிக்க ஆசிரியர் எழுச்சி நாள் நிகழ்வு

சுதுமலை ——

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் ஏப்ரல் 30 ஆம் திகதியை கத்தோலிக்க ஆசிரியர் எழுச்சி நாளாகக் கொண்டாடவுள்ளது.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் அன்றைய தினம் காலை 8.45 மணிமுதல் மாலை 4 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் திருப்பலியும் இடம்பெறவுள்ளது.

இயங்கிக்கொண்டிருக்கின்ற கத்தோலிக்க ஆசிரியர்களையும், ஓய்வு பெற்ற கத்தோலிக்க ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

சங்கம் தொடர்பான செயற்பாடுகள், வேறு திட்டங்கள் தொடர்பாகச் சில முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (91)

## இலவசக் கருத்தரங்கு

கரவெட்டி ——

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் 2006 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

கணித, விஞ்ஞான பிரிவுகளில் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இணைந்த கணித பாடத்தை யாழ்.பல்கலைக் கழக கணித, புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் கலாநிதி சிறி சற்குணராஜாவும், உயிரியல் பாடத்தை யாழ். பல்கலைக்கழக தாவரவியற்துறை விரிவுரையாளர் ஆர்.கபிலனும், விலங்கியற்துறை விரிவுரையாளர் எஸ்.குகதாஸும் நடத்தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் சமூகமளிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடக்குறிப்புக்களும் வழங்கப்படவுள்ளன.

## யாழ்.மறைமாவட்டத்தில் மூன்று புதிய குருக்கள்

யாழ்ப்பாணம் ——

யாழ். மறைமாவட்டத்திலிருந்து மூன்று பேர் புதிய குருக்களாக மே மாதம் 25 ஆம் திகதி திருநிலைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த பாலதாஸ் பிறாயன், யாழ். புனித மரியன்னை பேராலய பங்கைச் சேர்ந்த நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி, மயிலிட்டி தூய காணிக்கை மாதா ஆலயப் பங்கைச் சேர்ந்த எ.செ.கி.மரியதாஸ் ஆகியோரே புதிய குருக்களாகத் திருநிலைப் படுத்தப்படவுள்ளனர்.

புதிய குருக்கள் முறையே தமது முதல் திருப்பலியைப் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் மே மாதம் 28 ஆம் திகதியும், யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மே மாதம் 27 ஆம் திகதியும், சுதந்திரபுரம் தூய யூதாததேயு ஆலயத்தில் மே மாதம் 30 ஆம் திகதியும் ஒப்புக் கொடுக்கவுள்ளனர். (91)

## நல்லைக் குமரன் மலருக்கு கோரப்படும் ஆக்கங்கள்

நல்லூர் ——

நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக்குழு வெளியிடும் நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்களை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு கோரியுள்ளது.

இந்த மலருக்குத் தரமான கட்டுரைகள், ஆக்கங்கள் மற்றும் கவிதைகள் துறைசார்ந்த சைவப் பெரியோர்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாக யாழ். மாநகர ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

## உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவாளர் சேவை தாமதம்

உடுவில் ——

உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவாளர் சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டும் அங்கு இன்னும் பதிவாளர் சேவைகள் ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பதிவாளர் சேவைகளைப் பிரதேச செயலகங்களுக்குப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலகத்திலும் பதிவாளர் சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டபோதும் பிரதேச செயலகத்தில் போதிய இடவசதி இன்மையால் பதிவாளர் சேவைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

எனினும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களுக்காக இந்தப் பிரதேச செயலகங்களுக்குச் செல்லும் மக்கள் அங்கு இவற்றைப் பெறமுடியாத நிலையில் மீண்டும் யாழ். கச்சேரிக்கே செல்லவேண்டியுள்ளது.

இதனால் காலதாமதத்தையும் பல்வேறு சிரமங்களையும் மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

பதிவாளர் சேவைகள் இந்தப் பிரதேச செயலகத்திலும் பன்முகப்படுத்தப்பட்டபோதும் சேவைகளை உடனடியாக ஆரம்பிக்கப் பிரதேச செயலகத்தில் உடனடியாக நடவடிக்கை எடுப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ரி)

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

சாவகச்சேரி ——

சாவகச்சேரி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ நாகரீகத்துக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்குக்குத் தரம் 12, 13 இல் கல்வி கற்கும் மாணவர்களை காலை 9.30 மணிக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மத குருமாரும், ஆசிரியர்களும் கருத்துரை வழங்கவுள்ளதுடன் பரீட்சைக்கான தயார்படுத்தல் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந்தக் கருத்தரங்கில் குறித்த பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (29)

## மதிலை உடைத்து உட்புகுந்த இராணுவ தண்ணீர் பவுசர்

நெல்லியடி ——

இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் ஒன்று குஞ்சர் கடைப்பகுதியிலுள்ள வீடொன்றின் மதிலை உடைத்துக்கொண்டு வீட்டினுள் புகுந்தமையால் பருத்தித்துறை - யாழ்ப்பாணத்துக்கிடையிலான போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் நெல்லியடி குஞ்சர் கடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் வேகக்கட்டுப்பாட்டை இழந்த இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் ஒன்று வீதியிலிருந்து விலகி வீடொன்றின் மதிலை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் பாய்ந்தது. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வடமராட்சிப் பகுதியில் இராணுவ வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## புவியியல் II - (மானிடப் புவியியல்)

(10.04.2006 இன் தொடர்ச்சி....) **மானிடப் புவியியல் - I**

**கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து, அந்த விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**




20) ஐக்கிய அமெரிக்காவின் பிரதான கனிப்பொருள் மையங்களைப் படத்தில் 1,2,3 என்ற இலக்கங்கள் குறிக்கின்றன. அவை
i) வேமிலியன்,டுலுத்,கியூனா
ii) கியூனா,மெசாபி,மெனோமினி
iii) டுலுத், கியூனா, மெனோமினி
iv) டுலுத், வேமிலியன், மெசாபி

21) நகர வெப்பத்தீவுகள் உருவாகக் காரணம் தற்கால நகர்களின் கட்டடப் பொருட்களாகும். அப்பொருட்கள்
i) அஸ்பெஸ்டஸ், மரம்,மணல்
ii) கண்ணாடி,சீமெந்து, ஓடு
iii) ஓடு, மரம், கண்ணாடி
iv) கண்ணாடி, பிளாஸ்டிக், அலுமினியம்




22) பெரிய பிரித்தானிய புறவரிப்படத்தில் A,B,C குறிக்கும் நிலக்கரி வயல்கள் முறையே
i) ஸ்ரபோட்சயர், பிப்சயர், வைகன்
ii) மில்லேலரியன், வைகன், லானார்க்சயர்
iii) வைகன், பிப்சயர், லானார்க்சயர்
iv) லானார்க்சயர், வைகன், ஸ்ராபோர்ட்சயர்


23) உலக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் பத்து சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பைச் செய்யும் நாடுகள்
i) ஐக்கிய ஜெர்மனி,சுவிற்சர்லாந்து
ii) ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா
iii) ஐக்கிய ஜேர்மனி, இந்தியா
iv) ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ஜேர்மனி

24) உலகிலேயே குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைந்த நாடு
i) நோர்வே ii) ஸ்பெயின்
iii) டென்மார்க் iv) சுவீடன்

25) கைத்தொழில் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட இரண்டாவது நகராக்கப்புரட்சியின் விளைவு
i) நகரக்குடித்தொகை அதிகரித்தமை
ii) சேரிப்புறங்கள் உருவானமை
iii) நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்தமை
iv) நகரவெளி உருவானமை

26) பண்டைய முறைப் பயிர்ச்செய்கையில் சிறப்பிடம்பெற்ற பகுதிகள்
i) செல்வாஸ் காடும் கொங்கோக்காடும்
ii) சவன்னாப் புல்வெளியும் மத்தியதரைக்காடும்
iii) பருவக்காற்றுக்காடும் பிறேயரிஸ் புல்வெளியும்
iv) கொங்கோக்காடும் டவுன்ஸ் புல்வெளியும்

27) உலக மீன்வள முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் 1965இல் மேற்கொள்ளப்பட்ட அமைப்பு
i) அத்திலாந்திக் டுனா கமிஷன்
ii) நாரா நிறுவனம்
iii) ஹெலிபர்ட் ஒப்பந்தம்
iv) வங்காள விரிகுடா வேலைத்திட்டம்




28) ஜப்பானிய புறவரிப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள பிரதான கப்பல் கட்டும் மையங்களின் சேர்க்கை முறையே
i) ஒசாகா,டோக்கியோ,ஜொக்ககாமா
ii) ஜொக்ககாமா,நாகோயா,சிமித்
iii) சிமித்,கிற்றாசி, கமைசி
iv) ஒசாகா, கவாஸ்கி,ஒறோமினி

29) உலகில் அதி சிறந்த புடவை உற்பத்தி நாடாக விளங்குவது
i) இந்தியா ii) இலங்கை iii) சீனா iv)பாகிஸ்தான்

30) இலங்கையின் கிராமிய விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஒன்பது பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவது, ஒன்பதாவது மத்திய நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் முறையே.
i) தம்புள்ளை,வெலிமட
ii) நுவரெலியா,மீகொட
iii) தம்புள்ளை,நுவரெலியா
iv) வெலிசற,தம்புள்ளை

31) டொனால்ட்சன் ( Donaldson ) என்பது
i) ஜப்பானின் கார் உற்பத்திக் கம்பனி
ii) ஐக்கிய அமெரிக்காவின் போக்குவரத்து சாதன கம்பனி
iii) இந்தியாவின் மின்சார உபகரணக் கம்பனி
iv) இங்கிலாந்தின் கப்பல் கட்டும் நிலையம்.

32) டோக்கியோவிலிருந்து மேற்காக லண்டன் நோக்கி கடலில் பயணம் செய்யும் போது கடக்க வேண்டிய நீரிணைகள் முறையே
i) மலாக்கா நீரிணை,ஜிப்ரோல்டர் நீரிணை,மகலன் நீரிணை
ii) மகலன் நீரிணை,டோவர்நீரிணை,ஜிப்ரோல்டர் நீரிணை
iii) பாக்கு நீரிணை,ஜிப்ரோல்டர் நீரிணை, டோவர் நீரிணை
iv) மலாக்கா நீரிணை,பாக்குநீரிணை, ஜிப்ரோல்டர் நீரிணை

33) இலங்கையில் சேனைப் பயிர்ச்செய்கை நடைபெறும் மாவட்டங்கள்
i) அம்பாறை , மொனராகலை, அநுராதபுரம்
ii) அம்பாறை , குருநாகலை , மொனராகலை
iii) மொனராகலை , மன்னார் , அநுராதபுரம்
iv) மொனராகலை ,முல்லைத்தீவு, இரத்தினபுரி

34) இலங்கையில் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் தேடி தற்போது அதிகளவில் இடம் பெயரும் நாடு?
i) கொரியா ii) மாலைதீவு iii) அரேபியா iv) அவுஸ்திரேலியா

35) இலங்கையில் அண்மைக்காலத்தில் விருத்தியடைந்து வரும் ஓர் கைத்தொழில்
i) கைவினைப் பொருட்கள் ii)அலங்காரப் பொருட்கள்
iii) தைத்த ஆடைகள் iv) பாதணிகள்

36) இலங்கையின் நகர வளர்ச்சியைப் பௌதீக ரீதியாக நோக்குகையில்
i) குத்தான வளர்ச்சியைக் கொண்டுள்ளது
ii) குத்தானதும் கிடையானதுமான வளர்ச்சியைக் கொண்டுள்ளது.
iii) திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது.
iv) கிடையான வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

37) தெற்காசியாவில் ஐரோப்பிய குடியேற்ற வாதத்தினால் விருத்தியடைந்த இரு துறைமுக நகரங்கள்
i) ஜகார்த்தா, சிங்கப்பூர் ii) ரங்கூன், கொழும்பு
iii) ஜகார்த்தா,சென்னை iv) கொழும்பு, சிங்கப்பூர்

38) உலகில் முதன்முதலில் பெற்றோலிய எண்ணெய்க் கிணறு வெட்டிய அரேபிய நாடு?
i) ரொக் ii)பாஹ்றெய்ன் iii)குவைத் iv)ஐக்கிய அரபு எமிரேற்

39) இலங்கை தேயிலை உலக சந்தையில் எதிர் கொள்ளும் பிரச்சினை
i) தரமற்ற உற்பத்தி ii) பலநாடுகள் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகின்றமை
iii) குறைவான நிரம்பல் iv) பிரதியீட்டுப் பொருள் இன்மை


(40 புள்ளிகள்)

## பகுதி II

### வினாக்களுக்கு விடை தருக.

01) i) தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்தில் தென்னரைக் கோளத்தில் ஐந்தும் வடவரைக் கோளத்தில் ஐந்துமாக பத்து மில்லியன் நகரங்களைக் குறித்துப் பெயரிடுக (5 புள்ளி )
ii) உலகின் பெரும்பாலான நகரங்கள் வடவரைக் கோளத்திலேயே உருவாக்கம் பெறுவதற்குரிய காரணங்களை விபரிக்குக (5புள்ளி)
iii) இலங்கையின் நகராக்கப் போக்கின் முனைப்பான அம்சங்களை விபரிக்குக (5புள்ளி)

02) ஐக்கிய நாடுகள் குடித்தொகைப் பிரிவின் தரவின்படி உலகின் பிரதான நாடுகளின் 1970/80 1990/95 காலப் பகுதியின் குடித்தொகை வளர்ச்சி பற்றிய தகவலை கீழுள்ள வரைபடம் காட்டுகிறது. இந்தத் தரவைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




i) இந்த இரு காலப்பகுதிக்குரிய குடித்தொகை வளர்ச்சிப் பாங்கின் இரண்டு பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
ii) இந்தியா, தென்னாபிரிக்கா என்பவற்றின் குடித்தொகை வளர்ச்சியின் முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (3புள்ளி)
iii) இவ்விரு நாடுகளின் குடித்தொகை வளர்ச்சிப் போக்குகளுக்குரிய காரணங்களை விபரிக்குக. (4புள்ளி)
iv) 1970/80, பகுதியை விட 1990/95 காலப்பகுதியில் அதிகரித்த குடித்தொகை கொண்ட நாடுகளில் இந்தியா, தென்னாபிரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளின் குடித்தொகைப் போக்குகளுக்கான மூன்று முக்கிய காரணிகளை விபரிக்குக. (6புள்ளி)

03) i) தரப்பட்ட உலகப் புறவுருப் படத்தில் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் என்பவற்றில் மோட்டார் வாகனக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நகரங்கள் இவ்விரண்டைக் குறித்துப் பெயரிடுக (3புள்ளி)
ii) ஏதாவது ஒரு நாட்டில் நீர் குறித்துப் பெயரிட்ட நிலையங்களில் மோட்டார் வாகனக் கைத்தொழில் இடஅமைவு பெற ஏதுவாயமைந்த பிரதான காரணிகளை உதாரணங்களுடன் ஆராய்க (6 புள்ளி)
iii) உலகின் மோட்டார் வாகனக் கைத்தொழிலின் நவீன போக்குகள் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக. (6புள்ளி)

04) துரிதமான பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைந்து கொள்வதற்குக் கிடைத்த பல்வேறு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள போதும் இலங்கையானது ஆசியநாடுகளில் தலா வருமானத்தில் பின்தங்கி நிற்கிறது.
i) தென்கிழக்காசிய நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையின் தலாவருமானம் வெகுவாக குறைவடைந்திருப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக. (3புள்ளி)
ii) பொருளாதார வளர்ச்சியில் சிறிது பின்தங்கினாலும் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதில் இலங்கை பாரிய வெற்றி பெற்றுள்ளமைக்குரிய மூன்று காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (6புள்ளி)
iii) 2000ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அவதானிக்கக் கூடிய முனைப்பான இயல்புகளை ஆராய்க. (6புள்ளி)

05) i) வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களில் இருந்து வர்த்தகக் கலப்பு வேளாண்மை நடைபெறுகின்ற ஒவ்வொரு பிரதான நாட்டைக் குறிப்பிடுக. (4புள்ளி)
ii) கலப்பு முறை வேளாண்மையின் நவீன இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக. (5புள்ளி)
iii) இலங்கையில் பாற்பண்ணைத் தொழிலை விருத்தி செய்வதற்கு அண்மைக் காலமாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விபரிக்குக. (6புள்ளி)

06) i) உலகப் புறவரிப் படத்தில் அயன வலயக் காடுகள் மூன்றையும் இடைவெப்பவலயக் காடுகள் மூன்றையும் குறிப்பிடுக.
ii) அண்மைக்காலத்தில் காட்டுக் கைத்தொழிலானது பொருளாதார முக்கியத்துவம் பெற்று முன்னேற்றமடைந்திருப்பதற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (6புள்ளி)
iii) காட்டுக் காப்பு முக்கியம் பெறுவதற்கான காரணிகளை ஆராய்க.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## புவியியல் I - சூழற் புவியியல்

பகுதி I இலிருந்து 40 பல்தேர்வு வினாக்களுள் இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு புள்ளி வழங்கப்படும் .

### பகுதி I

☆ மிகப் பொருத்தமானது அல்லது சரியானது எனக் கருதும் விடையினைத் தெரிவு செய்து அவ்வினாவுக்கு எதிரே தரப்பட்டுள்ள புள்ளியிட்ட கோட்டில் அவ்விடையின் எண்ணை எழுதுக.

01. ஒரு சூழல் தொகுதியின் கூறுகள்
   i. கட்டிடம், தாவரம், மனிதன், கனிப்பொருட்கள், நீர்
   ii. உயிரினம், தாவரம், வளி, நீர், கனிப்பொருட்கள்
   iii. புல்வெளி, காடு, மனிதன், தொழிற்சாலை, நீர்
   iv. நன்னீர்க்குளம், வளி, நீர், மனிதன், விலங்குகள்


02. சூழல் என்பது
   i. ஓரிடத்தில் காணப்படும் பௌதீக அம்சங்களும் மனிதனும்
   ii. ஓரிடத்தில் காணப்படும் பௌதீக பண்பாட்டம்சங்களுக்கிடையிலான தொடர்பு
   iii. ஓரிடத்தில் காணப்படும் உயிர் உயிரிலிக் கூறுகளுக்கிடையே நிலவும் தொடர்பு
   iv. மனிதனும் அவனது செயற்பாட்டு அலகுகளும்

03. பின்வருவனவற்றில் எது சூழல் தொகுதிகளை மட்டும் கொண்டது
   i. தாமரை, அல்லி, ஐக்கோணியா, பிஸ்ரியா
   ii. பாலை, முதிரை, புல்வெளி, அல்லி
   iii. காடு, தாமரை, அல்லி, அல்கா பாலை
   iv. குளம், வீட்டுத்தோட்டம், காடு, சமுத்திரம்,

04. ஒரு சூழலில் தாவரங்களோ அல்லது விலங்குகளோ நிரந்தரமான சாகியம் ஒன்றை உருவாக்கும் படிமுறை வழிமுறை வருதல் அல்லது சியஸ்தொடர் நிலை விருத்தி எனப்படும். மேலும் வழிமுறை வரமுடியாத நிலை எவ்வாறு அழைக்கப்படும்
   i. நிரந்த சூழல்
   ii. சூழலியல் உச்சம்
   iii. உயர்ந்த புள்ளியில் வாழுதல்
   iv. துணைவழித் தொடர்

05. பிராணிகளின் மேய்ச்சல் நிலம் என அழைக்கப்படுபவை
   i. கோதுமை பரந்துள்ள இடங்கள்
   ii. அயனப் புல்வெளியுள்ள இடங்கள்
   iii. தாவரப் பிளாந்தன் பரந்துள்ள இடங்கள்
   iv. அயனக்காட்டு மரங்கள் உள்ள நிலப்பரப்பு

☆ மணற்கடற்கரையோரத்தின் குறுக்கு முகப் பார்வையை கீழுள்ள படம் காட்டுகிறது




A தாவரங்களற்ற பகுதி
B படரும் தாவப்பகுதி
C சிறிய புதர்களின் பகுதி
D பயிர் செய்யக்கூடிய பகுதி

06. D பகுதியில் மண்ணின் சேதனப் பொருட்கள் அதிகமாக இருக்கக் காரணம் யாது?
   i. உலர்த்தன்மை குறைவாகவும் அரிப்புக்குறைவாகவும் இருத்தல்
   ii. காற்றின் வேகமும் அலையின் தாக்கமும் அதிகமாக இருத்தல்
   iii. உறுதியற்ற மண்ணும் வேகமான காற்றும் இருத்தல்
   iv. மண்நீர் அதிகமாகவும் அலையின் தாக்கம் அதிகமாகவும் இருத்தல்

07. இப்பகுதியில் ஆழமான வேர்த் தொகுதியைக் கொண்ட தாவரங்கள் வளர்க்கப்படுகிறது எனின் அதற்கான காரணம்
   i. காற்றின் வேகத்தை அதிகரிக்க
   ii. மண்ணீர் மூலக்கூற்றை அதிகரிக்க
   iii. மண்ணரிப்பை தடைசெய்ய
   iv. உலர்த்தன்மை குறைவடைய

08. சூழல் தொகுதியொன்றினுள் சக்திப்பாய்ச்சல் மேலே செல்லச் செல்ல பெரிதும் குறைக்கப்படக்காரணம்.
   i. மேல் மட்டங்களின் செயற்பாட்டுக்கு சூரிய ஒளி தேவையில்லை
   ii. பச்சைத் தாவரங்கள் சூரிய கதிர்வீச்சலில் குறிப்பிட்டளவை நிலை நாட்டுவதால்
   iii. நுகரிகளின் செயற்பாடுகள் சூரிய ஒளியில் தங்கியில்லை
   iv. பிரிகையாக்கிகள் சூரியகதிர் வீசலைத் தடை செய்வதால்

09. சக்தியோ பதார்த்தமோ சேருதல் அல்லது வெளியேறுதல் நடைபெறாத தொகுதியாகக் கொள்ளக்கூடியது
   i. நீரியல் வட்டம் ii. காபன்வட்டம்
   iii. உணவு வலை iv. ஞாயிற்றுத் தொகுதி

10. சமுத்திரச் சூழலில் மேல்பெலாஜிக் சூழலானது உயிர்களின் பரம்பில் முக்கியத்துவமுடையதாக இருப்பதற்குக் காரணம்
   i. இச்சூழல் நீரின் இயல்பு உயிரின வளர்ச்சிக்கு உகந்தது
   ii. இச்சூழலில் உணவும் ஒட்சிசனும் அதிகமாக இருத்தல்
   iii. பெருக்குக் காலங்களில் உயிர்களின் உற்பத்தி அதிகமாக இருத்தல்
   iv. இச்சூழல் மட்டும் சூரிய ஒளி ஊடுருவும் பகுதியாக இருத்தல்

11. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க
   i. பசுந்தாவரங்களுக்கும் நுகரிகளுக்கும் நேடியான தொடர்பு இல்லை
   ii. பயிர்கள், புற்கள் என்பன இரண்டாம்படி நுகரிகளாகும்
   iii. ஒட்டுண்ணிகள், தாவரஉண்ணிகள், ஊனுண்ணிகள், உயர் அனைத்துமுண்ணிகளே நுகரிகளாகும்
   iv. உணவுச்சங்கிலித் தொடர்பு குலைதல் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தாது

12. பின்வருவனவற்றுள் முதல் உற்பத்தியாக்கிகளாகக் கருதக்கூடியது
   அ) உக்கிய மரக்குற்றியிலுள்ள காளான்
   ஆ) பூப்பாத்தியிலுள்ள பூச்சிகள்
   இ) குளமொன்றிலுள்ள தாமரை நாற்றுக்கள்
   ஈ) முருகைக் கற்பாறையிலுள்ள பக்றீரியாக்கள்
   உ) தாவர உக்கலிலுள்ள பக்றீரியாக்கள்
   i. அ, இ ii. அ, உ iii. இ,ஈ iv. ஈ, உ

13. 'P. Toms' என்பது
   i. சுனாமி அனர்த்த முன்பாதுகாப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு
   ii. சுனாமி அனர்த்த முன்னெச்சரிக்கை செயற்பாட்டுக் குழு
   iii. சுனாமி அனர்த்த மீளாய்வு முகாமைக் குழு
   iv. சுனாமி அனர்த்த புனர்நிர்மாணக் கட்டமைப்பு

14. குத்துச் சாய்வுகளை உடைய பள்ளத்தாக்கில் ஆறானது நிலைக்குத்தரிப்பில் ஏற்படும் பொழுது பள்ளத்தாக்கில் ஏற்படும் மாற்றங்களில் சரியானது
   i. அகலத்தைவிட ஆழம் அதிகரிக்கிறது
   ii. பக்கச் சாய்வுகள் தின்னலுக்குட்படுகிறது
   iii. பள்ளத்தாக்கானது அரிக்கப்பட்ட படிவுகளால் மூடப்படுகிறது
   iv. ஆழம் அதிகரிக்க அதிகரிக்க அகலமும் அதிகரிக்கிறது

15. மரநிகர் வடிகாலமைப்பு உருவாகுவதற்குத் தேவையான பௌதிக நிலைமைகள்
   i. ஓரேயினப்பாறையும் மென்சாய்வும்
   ii. டோம்படிப்பும் பிளவுபட்ட நீர்பிரிமேடும்
   iii. ஓரேயினப்பாறையும் நேரான நீர்பிரிமேடும்
   iv. சமாந்தரப் பாறையும் நேரான நீர்பிரிமேடும்

16. தகட்டோட்டக் கருதுகோலின்படி இரு தட்டுக்கள் விலகும் போது இவ் இடை வெளிகளில் உட்பாகப் பொருட்கள் வந்து படிதல்
   i. கடற்கரை பரவுதல் ii. அடையல்கள் படிதல்
   iii. புதிய நிலம் வெளிப்படுதல் iv. தீவுகள் உருவாதல்

17. பாறைகளில் உருமாற்றம் ஏற்படும் போது வெப்பமான பாறைக் குழம்பு வேறுபாறைகளுடன் இணைவதால் உருவாகும் மாற்றம்
   i. வெப்ப உருமாற்றம் ii. தொடுகை உருமாற்றம்
   iii. அமுக்க உருமாற்றம் iv. பிரதேச உருமாற்றம்

18. பசுபிக் சமுத்திரக் கரையிலும் மேற்கிந்திய தீவுகளுக்கு அண்மையிலும் சமுத்திர அழிகள் காணப்படக் காரணம்
   i. இவ்விடங்களில் சமுத்திர அடித்தளப்படிவுகள் சேர்வதில்லை
   ii. தகட்டசைவுகளின் போது இருதட்டுகள் பிளவுபட்ட இடமாக இருத்தல்
   iii. புவி நடுக்கம் சாதாரணமாக ஏற்படுகின்ற பகுதிகளாக இருத்தல்
   iv. இப்பகுதியில் உயிர்ப்பு எரிமலைகள் எதுவும் இல்லாதிருத்தல்

19. பின்வருவனவற்றுள் தீப்பாறைகளின் தொகுதி
   i. சலவைக்கல், சி லேற்றுப்பாறை, கருங்கல், களிப்பாறை
   ii. படிகப்பார், டயோறைற், சிலேற்றுப்பாறை, போபிரி
   iii. கருங்கல், டயோறைற், போபிரி, டொலமிற்
   iv. பளிங்குப்பட்டைப்பாறை, போபிரி, டொலமிற், களிப்பாறை

20. பிளவுக்கக்குகையால் உருவாகிய எரிமலை மேட்டு நிலங்களின் சரியான தொகுதி.
   i. தெக்கிரான் , அன்றிம், அபிசீனியன், பரானா
   ii. கொலம்பியா-சினேக்,அன்றிம்,பரானா,அபிசீனியா
   iii. கொலம்பியா- சினேக்,பொக்கான்,அயர்லாந்து,தெக்கிரான்
   iv. அலாஸ்கா, பொக்கான்,அன்றிம்,தெக்கிரான்

21. பிரான்ஸ்,இங்கிலாந்து,முன்னைய யூகோஸ்லாவியா ஆகிய பிரதேசங்களின் சிறப்பான சுண்ணாம்புப் பாறைப் பகுதிகள்.
   i. கென்ரக்கி, ஜமேக்கா,கோசஸ்
   ii. ஜமேக்கா, சோமசெட்,காசித்து
   iii. சோமசெட்,செடர்மென்டி, கென்ரக்கி
   iv. கோசஸ்,செடர்மென்டி,காசித்து


22. பொங்குமுகம் தொடர்பாகச் சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் சரியான கூற்றுக்கள்
   i. கடல் நீரும் நன்னீரும் கலக்குமிடமாகப் பொங்குமுகம் அமையும்.
   ii. படிவுகள் அகற்றப்படும் வேகத்தைவிடப் படிவு செய்யும் வேகம் கூடுதலாக இருக்கும் போது பொங்குமுகம் உருவாகும்.
   iii. வன்பாறை நிலங்கள் நீரில் அமிழ்வதனால் பொங்கு முகம் உருவாகும்.
   iv. ஆற்றுமுகங்கள் நேரடியாக கடலுடன் இணையாத இடங்களில் பொங்குமுகம் உருவாகும்.
   1) 1 உம், 2 உம் 2) 1 உம், 3 உம் 3) 2 உம், 3 உம் 4) 1 உம், 3 உம், 4 உம்



அ ஆ இ ஈ உ

23. மேலே படத்தில் அ,ஆ,இ,ஈ,உ எனக் குறிப்பிடப்பட்ட நிலவுருவங்கள் தொடர்பான சில கூற்றுக்களில் சரியான கூற்று
   i. அ உம், இ உம் காற்றினால் உருவாக்கப்பட்டவை.
   ii. ஈ உம், உ உம் அலையினால் உருவாக்கப்பட்டவை
   iii. ஆ உம், ஈ உம் ஆற்றினால் உருவாக்கப்பட்டவை
   iv. இ உம் , உ உம் பனி ஆற்றினால் உருவாக்கப்பட்டவை.

24. மண் உருவாக்கச் செயன்முறையின் விளைவாக உருவாகிய மண்ணின் எளிமையான பக்கப் பார்வையின் அடிவானங்களைக் கீழுள்ள படம் காட்டுகிறது. படத்தில் B,E,C, D அடிவானங்கள் முறையே
   i. கனிப்பொருட் தொகுதி, சிதைவடைந்த தாய்ப்பாறை, அடித்தளப் பாறை .
   ii. சேதனப் பொருள் பகுதி, கனிப்பொருட் பகுதி, சிதைவடைந்த தாய்ப்பாறை.
   iii. சேதனப் பொருள் பகுதி, சிதைவடைந்த தாய்ப்பாறை, அடித்தளப்பாறை
   iv. சிதைவடைந்த தாய்ப்பாறை கனிப்பொருட்பகுதி, அடித்தளப்பாறை.




25 A அடிவானம் நிறம் கூடியதாகக் காணப்பட்டால் அதற்கான காரணம்
   i. கனிப்பொருட்கள் அதிகளவில் செறிந்திருக்கும்.
   ii. தாவரக் கழிவுகள் மேற்பரப்பில் நிறைந்திருக்கும்.
   iii. மேற்பரப்பு அரித்தலுக்குட்படாதிருக்கும்.
   iv. சேதனப் பொருட்கள் அதிகளவில் செறிந்திருக்கும்.

26. இலங்கையின் ஈரவலயத்தில் அதிகமாகக் காணப்படும் மண்
   i. செங்கபில நிறமண் ii. சிவப்பு- மஞ்சள் பொட்சோலிக்
   iii. கல்சியமற்ற கபிலமண் iv. சிவப்பு - மஞ்சள் லட்டோசோல்

27. மலைப் பனிக்கட்டியாறுகளின் சரியான தொகுதி
   i. சஸ்கச்வான், கொலம்பியா, ஜோகுல்கள்
   ii. பிறஸ்பேக், மலாஸ்பினர், ஜோகுல்கள்
   iii. நெவா செம்லியா, ஜோகுல்கள், பிரான்சிஸ்சியோ
   iv. சஸ்கச்வான், மலாஸ்பினா, கொலம்பியா

28. வளிமண்டலம் இடைவிடாது அசைந்து கொண்டேயிருப்பதற்கான அடிப்படைத் தொழிற்பாடுகள்.
   i. புவிச்சுற்றுகையும் பொதுச்சுற்றோட்டமும்.
   ii. புவிச்சுழற்சியும் புவிச்சுற்றுகையும்.
   iii. புவிச்சுற்றுகையும் புவி 23 1/2 பாகை சாய்ந்திருப்பதும்
   iv. புவிச்சுழற்சியும் பருவக்காற்று நகர்வும்.

29. புவியியல் கதிர்வீச்சு, ஈரப்பதன், அகலக் கோடுகளுக்கிடையிலான அமுக்க வேறுபாடு ஆகியவற்றின் சமனிலையின்மை என்பவற்றின் பிரதான தொழிற்பாடு
   i. வெப்பநிலையின் அளவைப் பிரதேச ரீதியாக வேறுபடுத்துதல்
   ii. காற்று இயக்கத்தைத் தூண்டுதல்.
   iii. புவிச்சுழற்சிக்குக் காரணமாக இருத்தல்.
   iv. வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டத்தைத் தூண்டுதல்.

30. முகில் உருவாக்கத்துடன் இணைந்ததான எல்லா மேற்காவுகை நடவடிக்கைகளையும் கொண்டுள்ள வளிமண்டல அமைப்பு.
   i. மாறண் மண்டலம் ii. படைமண்டலம் iii. அயன்மண்டலம் iv. இடை மண்டலம்

செல்வி பத்மா கந்தசாமி B.A. Geography Hons, Dip in Edu
கொக்குவில் இந்து கல்லூரி.





கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தில் இலங்கை - இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட தூபி திறப்புவிழா நிகழ்வில் - தூபியின் பெயர்ப்பலகையை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்துவைப்பதையும், நினைவுத் தூபியை தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் டானியல் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# போர்க்காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுச் சின்னங்கள் தோற்றுவிக்கப்படவேண்டும்!

## துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன்



கிளிநொச்சி

போரைத் தமிழ்மக்கள்மீது திணித்து சிங்களப் பேரினவாதம் புரிந்த படுகொலைகளை நினைவு கூருவது முக்கியமானது என - தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி- ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் இலங்கை - இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியைத் திறந்துவைத்து பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர்க்காலத்தில் எமது மக்கள் பல துன்பங்களைச் சந்தித்து தமது உயிர்களை அநியாயமாக இழந்திருக்கிறார்கள்.

அந்த மக்களின் நினைவுகளைத் தாங்கக்கூடிய நினைவுச் சின்னங்கள் எமது தாயகத்தில் தோற்றுவிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கிராம அலுவலர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை காவற்துறைப் பொறுப்பாளர் ஜீவானந்தம், அரசியற்துறைப் போராளி பசுபதி, இரண்டு மாவீரர்களின் தந்தை பேரம்பலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார். மலர்மாலையைக் கரும்புத் தோட்ட முகாமையாளர், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் அணிவித்தனர்.

நினைவுத் தூபியை தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் டானியல் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

தூபியின் பெயர்ப் பலகையை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன் திரைநீக்கம்செய்து வைத்தார். அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கல்வெட்டைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னார் - அடம்பன் மருத்துவமனையில் மருத்துவசேவை குறித்த கலந்துரையாடல்

மன்னார்

மன்னார்- அடம்பன் மருத்துவமனையில் சூழல் மேம்பாடு மற்றும் மருத்துவசேவைகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தமிழ்மாறன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சூழல் மேம்பாடு தொடர்பாகவும் மருத்துவ சேவைகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வாமன், மன்னார் மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யூட், மன்னார் மாவட்ட ஆதார மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி கெங்காதீஸ்வரன், சுதேச பாதுகாப்புச் சபைத் தலைவர் அரசக்கோன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (கு)

# கில்பேட் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி

மன்னார்

மன்னார்- கள்ளியடி மேஜர் கில்பேட் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை இலுப்பைக்கடவைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் டென்சில் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை பள்ள மடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் குலம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்று, சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (கு)

# முல்லைத்தீவு கரையோரப் பகுதியைச் சேர்ந்த 12 நாட்டுப்பற்றாளர்கள் கௌரவிப்பு!

முல்லைத்தீவு

அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் - முல்லைத்தீவு மாவட்ட கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த 12 நாட்டுப்பற்றாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு நகரப் பகுதியில் நடைபெற்றது.

சகிலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் கிருஷ்ணபிள்ளை ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்படையின் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் ரங்கன் ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை தமிழீழ கடற்படையின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி ஏற்றிவைத்தார். மலர்மாலையை கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் மரியராசா அணிவித்தார்.

நினைவுரைகளை விசேட ஆணையாளர் கிருஷ்ணபிள்ளை, முல்லைத்தீவு அரச செயலக நிர்வாக அலுவலர் காசிப்பிள்ளை, தமிழீழ கடற்படையின் முல்லைத்தீவு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் தினேஸ், முல்லைத்தீவு நகர வர்த்தக சங்கத் தலைவர் மனோ, கடற்படையின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர். (கு)

# தமிழ் மக்கள் மீது நடத்திவரும் அட்டூழியங்களை இனியும் நாம் பொறுத்திருந்து பார்க்கமுடியாது!

## விடுதலைப் போராட்டத்தில் இணைந்தவர் தெரிவிப்பு

கிளிநொச்சி

அரச படைகளும், ஒட்டுக் குழுக்களும் இணைந்து தமிழ் மக்கள் மீது நடத்தி வரும் அட்டூழியங்களை இனியும் பொறுக்கமுடியாது.

கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை விடுதலைப் போராட்டத்தில் 40 பேர் இணைந்துகொண்டனர். இதில் ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், சமூகத் தொண்டர்கள் என்பவர்களும் அடங்குவர்.

இவ்வாறு இணைந்து கொண்டவர்களில் பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது வாழ்நாள் அனுபவத்தை மட்டுமல்ல எமது இனத்தின் அனுபவத்தையே வைத்துக் கூறுகின்றேன் சிங்களவர்களிடம் [illegible] கேட்டுப் பெறவேமுடியாது.

தமிழர்களைக் கூண்டோடு அழித்தொழிப்பதைத்தவிர வேறு எந்தச் சிந்தனையுமில்லை. இப்படியிருக்க தமிழ்மக்களை நிம்மதியாக வாழ விடுவார்கள் என்று நாம் எப்படி எதிர்பார்ப்பது.

போராடித்தான் எமது வாழ்வுரிமையைப்பெறமுடியும். இன்று எங்களது நெஞ்சங்களை உறுத்திக் கொண்டிருப்பவைகள் எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியினுள் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள்தான். அவர்கள் எவ்வளவு அவலப் படுகின்றார்கள்.

இன்று எங்களைப் பாருங்கள். நாங்கள் பளையில் இருக்கிறோம். சுதந்திரமாகவும் கௌரவமாகவும் இருக்கிறோம். ஆனால், எங்கள் இடத்திலிருந்து சில கிலோ மீற்றர்களுக்கப்பால் இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கும் மக்களின் நிலை பெரும் அவலமாக இருக்கிறது.

அவர்கள் எங்களது உறவுகள்தான். நாங்கள் முதலில் அவர்களை மீட்டெடுக்க வேண்டும். எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. நாங்கள் அதை விரைவில் செய்து முடிப்போம்.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து எதிரிகளை ஓடஓட விரட்டுவோம். அவர்களை அவர்களது தேசத்துக்கே அனுப்பிவைப்போம்.

அதற்குப் பிறகுதான் தமிழர்களின் வாழ்வுக்கு நிம்மதிகாணமுடியும்.

எனது குடும்பத்தைப் பொறுத்தவரை நான் இரண்டு மாவீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன். தற்போது எனது மனைவியின் சம்மதத்துடன் - அவரது ஆசியுடன் போராட்டத்தில் இணைந்துள்ளேன்.

கடந்த காலங்களில் நான் எல்லைப்படையாகச் செல்லும்போது அவரது பூரண ஒத்துழைப்பு இருந்தது. எனது இரண்டு சகோதரர்களும் விட்டுச் சென்ற பாதையில் தொடர்ந்து போராடுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# திலீபன் மருத்துவமனையின் 4 ஆம் ஆண்டு நிறைவு விழா

முல்லைத்தீவு

முல்லைத்தீவு- ஐயன்குளம் திலீபன் மருத்துவமனையின் நான்காம் ஆண்டு நிறைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மருத்துவமனை வளாகத்தில் ஐயன்குளம் பாடசாலை அதிபர் தர்மபூபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மருத்துவ கலாநிதி அருந்ததி ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை மருத்துவப்பிரிவு மகளிர் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை மல்லாவிப் பிரதேச மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மூவேந்தன் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை மல்லாவிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றிவைத்தார்.

திருவுருவப் படங்களுக்கான மலர்மாலையை இரு மாவீரர்களின் பெற்றோர்கள் அணிவித்தனர்.

இந்த நிகழ்வின் நினைவுரைகளை மல்லாவி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அமிர்தலிங்கம், ஐயன்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளரும் - கிராம முன்னேற்றத் தலைவருமான தங்கராஜா, துணுக்காய் பிரதேச செயலர் நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை மல்லாவி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஐயன்குளம் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு, பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் உருவான நவம் அறிவுக்கூடப் போராளிகளின் கலைநிகழ்வு என்பன நடைபெற்றன.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐயன்குளம், புத்துவெட்டுவான், மருதன்குளம், பழைய முறிகண்டி, தேறாங்கண்டல் உள்ளிட்ட கிராம மக்கள் தமக்கான மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். கடந்த 2002 ஆம் ஆண்டு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை இந்தத் தேவையை நிறைவுசெய்தது.

இதற்கான நிரந்தரக் கட்டடத்தை புலம்பெயர் வாழ் தமிழரான இராஜரட்ணம் குடும்பத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். இதன் திறப்பு விழா நிகழ்வு இந்த வருடம் முற்பகுதியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாளாந்தம் 30 இற்கும் அதிக மானவர்கள் தமது மருத்துவ தேவையை நிறைவுசெய்து வருகின்றனர். இதேவேளை, ஏனைய பின்தங்கிய கிராமங்களுக்கான நடமாடும் சேவையையும் இந்த மருத்துவமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

வட்டக்கச்சி

வில்லடி - பூநகரி என்னும் முகவரியிலுள்ள தனபாலசிங்கம் சந்திரகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (842044308) வட்டக்கச்சி மாயவனூரில் கண்டெடுக்கப்பட்டு - வட்டக்கச்சி காவல்துறை பணிமனைக்கு முன்பாகவுள்ள விக்னா என்பவருடைய கடையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (09)

# மின்தாக்கி 15 பேர் காயம்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு - அம்பலவன் பொக்கணையில் மின்சாரம் தாக்கி 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

சுனாமி அனர்த்ததால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களே மின்தாக்குதலுக்கு உள்ளாகினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் இடைத்தங்கல் முகாமில் இணைக்கப்பட்டிருந்த மின்கம்பியில் மின்னல் தாக்கியதாகவும், இதனால் மின்கம்பி அறுந்து வீடுகளுக்கு மேல் விழுந்தால் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

- திருக்குறள்

## நமது நோக்கு

# ஜெனிவாவுக்கு உல்லாசப் பயணமா?

ஜெனிவாவில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பங்கேற்பதற்கான சூழல் இப்போது இல்லை என்றும்-சுமுகநிலை உருவாக்கப்படும் வரை தாம் பேச்சுக்கு வரமுடியாதெனவும் நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரிடம் புலிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் அடுத்தகட்டப் பேச்சுக்கள் குறிப்பிட்ட திகதியில் நடைபெறாது என்பது உறுதியாகியுள்ளது. அநேகமாக இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் காலத்தில் நடைபெறுமா என்பதும் சந்தேகம்தான்.

ஏனெனில், இப்போது தமிழர் தாயகப் பகுதிகளில் முற்றுமுழுதாக இயல்பு நிலை சீர்குலைக்கப்பட்டு ஒரு 'போர்ச்சூழலே' காணப்படுகிறது. தினமும் அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்படுகின்றனர்.

நாளாந்தம் பத்திரிகைகளில் படுகொலைகள் குறித்த செய்திகளே முதலிடம் பிடிக்கின்றன. தமிழ் மக்கள் இனந்தெரியாத நபர்கள் என்ற போர்வையில் - இனப்படுகொலைக்குட்படுத்தப்படுவது குறித்து சர்வதேசம் கவனத்தில் எடுத்தாகவே தெரியவில்லை.

கண்காணிப்புக்குழுத் தலைவரும், சர்வதேச சமூகமும் கிளைமோர் தாக்குதல்களில் கொல்லப்படும் படையினருக்காக அனுதாபப்படுகின்ற அளவுக்கு - தினமும் இனப்படுகொலை செய்யப்படும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், அரச படைகள் ஊக்கம் பெற்று தமது இராணுவக் கெடுபிடிகள், நெருக்கு வாரங்களைத் தீவிரப்படுத்தி வருகின்றன. தமிழ் மக்களை எவ்வளவுக்கு எவ்வளவு துன்புறுத்தி அடிமைப்படுத்தி வைக்க முடியுமோ அந்தளவுக்கு அவர்கள் மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருக்கின்ற நிலையில் கூட, தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைகள் தான் - கிளைமோர்களாக வெடிக்கத் தொடங்கியதை எவரும் மறுக்க முடியாது.

அப்பாவிகளின் உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டபோதுதான் பதில் தாக்குதல் என்று இறங்கும் நிலை ஒன்று உருவாகி அதன் விளைவாக நாடு ஒரு முழு அளவிலான போரின் விளிம்புக்கே சென்று விட்டது.

ஜெனிவா பேச்சுக்களுக்கு முன்னரே இரு தரப்பும் வன்முறைகளை கைவிடுவதாக இணக்கம் காணப்பட்டது. ஜெனிவாவிலும் இது பற்றியே பேசி இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால், கடைசியில் என்ன நடந்தது? துணை இராணுவக் குழுக்களின் படுகொலைகளும், தாக்குதல்களும் தீவிரம் பெற்றதுடன், இனப்படுகொலைகளும் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டு மீண்டும் அதே கொந்தளிப்பு நிலை உருவாகியிருக்கிறது.

இந்தக் கொந்தளிப்பு நிலையைத் தணிப்பதற்கு அரசுதான் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில், முதலில் தாக்குதல்களைத் தொடுத்து, படுகொலைகளை நிகழ்த்தி கொந்தளிப்பு சூழலை உருவாக்கியதே அரச தரப்புத்தான்.

தமக்கும் தாக்குதல்களுக்கும் தொடர்பில்லையென்றும், ஆயுதக்குழுக்கள் எதுவும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லை என்றும் கூறியது அரசு. பின்னர் மகிந்தவே தனது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறினார்.

ஆனால், இதுவும் வெறும் வாய்ஜாலமாகவே போய்விட்ட நிலைமை - முற்றிமுறுகி மீண்டும் ஒரு போரின் விளிம்பில் நிற்கும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் - நாளாந்தம் படுகொலைகள் தொடரும்நிலையில் பேச்சுக்களை நடத்துவதால் என்ன பயன் கிடைக்கும்? வெறுமனே ஜெனிவா சுற்றுப் பயணம் செய்து வருவதால் மட்டும் எந்தப் பிரச்சினையும் தீராது.

இதைத்தான் புலிகள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஜெனிவாவுக்கு சென்று பேசுவதென்பதைவிட - பேசுவதில் எட்டப்படும் இணக்கப்பாட்டை அமுல்படுத்த முதலில் உறுதிபூண்ட பின்னரே - அதற்கான உத்தரவாதத்தைப் பெற்ற பின்னரே ஜெனிவா பேச்சுக்குச் செல்வது நன்று. அதுவே மிகவும் முக்கியமான விடயம் என்பதை நோர்வேயும், இலங்கை அரசும் கருத்தில் எடுத் துக்கொள்ள வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# பிள்ளைகளை கொலைக்கு இரையாக்காமல் பாதுகாப்பான பகுதிக்கு நகருங்கள்

## கஜேந்திரன் எம்.பி. பெற்றோரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்

இராணுவத்தினரின் திட்டமிட்ட படுகொலைக்கு இரையாகாது தங்கள் பிள்ளைகளை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தூர்-மீசாலை வீதியில் இராணுவ முகாமுக்கு அருகில் ஐந்து அப்பாவி இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புத்தூரிலிருந்து மீசாலை செல்லும் வீதியிலுள்ள 51 - 1 ஆவது இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து ஓட்டோ ஒன்றில் சென்ற ஐந்து இளைஞர்கள் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு மிகக் குரூரமாக சித்திரவதைக்குட்படுத்திய பின்னர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குரூரமாக அடித்து சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்பதற்கு அவர்களது உடல்கள் முழுதும் காணப்பட்ட காயங்களே சான்றாக அமைகின்றன.

இராணுவத்தளபதியாக சரத்பொன்சேகா பொறுப்பேற்ற பின்னர் தமிழ் மக்களின் பேச்சுச்சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், தமிழர்களின் மனிதஉரிமைகள், ஜனநாயக சுதந்திரம், கல்விச் சுதந்திரம், தொழில் செய்யும் சுதந்திரம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது.

கைதுகள், காரணமின்றி சித்திரவதைகள், சிறைவைப்புகள், கற்பழிப்புகள், கொலைகள், திட்டமிட்ட இன அழிப்புகள் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இனவெறி, கொலைவெறிபிடித்த சிங்களப்படைகளின் தமிழின அழிப்பின் ஓர் வெளிப்பாடே மேற்படி இளைஞர்களின் படுகொலையாகும்.

இவ்வாறு இராணுவ முகாமுக்கு முன்பாக வைத்து துடிக்கத் துடிக்க கொலை செய்தது படையினர் என்பது அப்பட்டமான உண்மை. அப்படியிருந்தும், முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைப்பது போன்று இந்தச்சம்பவத்துக்கும் இராணுவத்தினருக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க பொய் கூறியதன் மூலம் உண்மையை மூடிமறைக்க முயன்றது மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற முயல்கின்றார் என்பது புரிகிறது.

இதிலிருந்து, சிங்கள இராணுவ சிப்பாயில் இருந்து அதியுயர் மட்ட சிங்கள தளபதிகள், அதிகாரிகள்வரை தமிழினத்தை குறிப்பாக இளைய தமிழ் தலைமுறையினரை முற்றாக அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான படுகொலைக்கும், சித்திரவதைகளுக்கும் அஞ்சியே பல்லாயிரக் கணக்கான தமிழ் இளையோர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி பலநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

எனினும், இந்தப்படுகொலைகளை கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காதது ஏமாற்றத்தினையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசபயங்கரவாத நடவடிக்கைகள் அனைத்தும் இராணுவ உயரதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச - எதிர்க்கட்சி சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடுதான் நடைபெறுகிறது.

இந்தநிலையில், இந்தப்படுகொலைகள், சித்திரவதைகள், இனஅழிப்பு நடவடிக்கைகளிலிருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எனவே, படையினரின் இந்த அராஜகத்துக்கு முடிவுகட்டி அவர்களை எம்மண்ணில் இருந்து வெளியேற்றும் வரை - குடாநாட்டு இளைஞர்கள், யுவதிகள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்வதோடு- பெற்றோர்களும் தம்மையும், தமது பிள்ளைகளையும் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பான இடங்களுக்கு உங்களது பிள்ளைகளை கூட்டிச்செல்லுங்கள்.

அத்துடன் குடாநாட்டு இளைஞர்களுக்கு இன்னுமோர் வேண்டுகோள்-

சிங்களப்படைகளால் எமது உறவுகள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுகள், அப்பாவி மக்கள் மீதும் மாணவர்கள் மீதும், கடற்தொழிலாளர்கள் மீதும் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் காரணமற்ற கைதுகள், சித்தரவதைகள்,கொலைகள் என்பவற்றுக்கெதிராக பல போராட்டங்களை நாடாளுமன்றத்துக்குள்ளே நடத்தி நாடாளுமன்றச்செயற்பாடுகளை முடக்கியுள்ளோம்.

நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் உங்களோடு இணைந்து பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். தொடர்ச்சியாக வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பல ராஜதந்திரிகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தித்து எமது மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் அரச பயங்கரவாதத்தைப் பற்றி முறைப்பாடு செய்திருக்கிறோம்.

ஆனாலும், எமது எதிர்ப்புப்போராட்டங்களுக்கு மதிப்பளித்தோ அல்லது சர்வதேச நாட்டு இராஜதந்திரிகளின் ஆலோசனைகள் அழுத்தங்களுக்கு மதிப்பளித்தோ தமிழ் மக்கள் மீது வன்முறைகளைப் புரிந்த படையினர் எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டதாக இல்லை.

அதுமட்டுமின்றி, தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட வண்ணமேயுள்ளது. ஒரு போதும் அரசு இதனை நிறுத்தப்போவதில்லை. எனவே, இந்தக் கொடுமைக்கெல்லாம் முடிவுகட்டவேண்டுமாயின் - எதிரிக்கு பதிலடி கொடுக்க வேண்டும். அவ்வாறு பதிலடி கொடுப்பதன் மூலம் அரசபயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து எமது மண்ணிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற இளைஞர்கள் - யுவதிக்கு முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு மாநகர சபைத் தேர்தல் ஐ.தே.க நிலைப்பாட்டில் தாமதம்

கொழும்பு —

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் சுயாதீனக்குழு ஊடாக போட்டியிடுவது தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.க.குழு நேற்றுமுன்தினம் ஆராய்ந்தது. இருப்பினும் எதுவித இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

வேட்புமனு நிராகரிக்கப்பட்டது தொடர்பான மேன்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 24ஆம் திகதி வழங்கப்பட்ட பின்னர் இது தொடர்பாக இறுதி முடிவெடுக்கவும் அந்தக் குழு தீர்மானித்துள்ளது.

மாநகரசபை வேட்பாளர் தொடர்பாக ஐ.தே.க வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த சிறிசேன கூரேயுடன் தான் ஆலோசனை நடத்த உள்ளதாக அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சுயாதீனக் குழுக்களுடன் உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்களை ஐ.தே.க நடத்தி வருகிறது. தற்போதைய நிலைமைகள் குறித்து எதுவித கருத்தும் தெரிவிக்க இயலாது என்று சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட 22 சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. நீதிமன்ற வழக்குகளினால் கடந்த மார்ச் 30ஆம் திகதி இந்தச் சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 21.04.2006 - 27.04.2006

| | | | |
|---|---|---|---|
| புத ராகு | சூ | | செவ் |
| சுக் யுரே | 22 இ. 12-06 கும் - சந் | 24 பி.இ 1-47 மீன - சந் | சனி |
| சந் நெப் | 26 பி.இ 2-57 மே - சந் | | |
| | | குரு | கேது |

## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை, 1 ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும் இடையிடையே கருத்து வேற்றுமை தோன்றும். வருவாய்க்கு ஏற்றளவு செலவும் இருக்கும். புத்திரர்களால் அதிக வருவாயை எதிர்பார்க்க முடியாது. உறவினர்களின் வரவு சற்று ஆறுதல் தரும். விவாக சுப கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாயினும் சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்க முடியும். மேலதிகாரிகளின் தன்மைக்கு ஏற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு பிரயாசை அதிகமாகும். வியாபாரம் மத்திமமாக இருக்கும். முதலீடுகளுக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும். வெகு பிரயாசையின் மேல் வருவாய் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. பரீட்சைகளில் சாதாரண சித்தி உண்டு.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 கால்கள்)



இடபராசியில் பிறந்தவர் களுக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக அமையும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் அனுகூலமாகும். உறவினர் நண்பர்களின் வரவால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். விவாக கருமங்கள் விரைவில் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் சிறப்பாக நடக்கும். அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். அலுவலகங்களில் செல்வாக்கு அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கை சிறப்பாக இருக்கும். தேவைக்கு வங்கிகள் உதவும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். தொழிலாளர் மத்தியில் உற்சாகமும் தொழில் நடவடிக்கைகள் சிறப்பாகவும் அமையும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும் பரீட்சையில் சித்தியும் உண்டு.

## மிதுனம்


(மிருகசீரிடம் 3,4 கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 கால்)



மிதுன ராசியினருக்கு குடும்பத்தில் சச்சரவுகளும் அமைதிக் குறைவும் இருக்கும். இனபந்துக்களிடையே கருத்து வேற்றுமை உருவாகும். தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். குடும்பப் பெண்களுக்கு நிம்மதி இருக்காது. வரவுக்கு மேல் செலவு காட்டும். விவாக சுபகருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளுவும், பொறுப்புக்களும் அதிகரிக்கும். சக ஊழியர்களின் உதவி கிடையாது. மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் குறையும். உழைப்புக்கேற்ற லாபம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சைகள் திருப்தி தராது.

## கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நன்றாக நடந்தாலும், இடையிடையே சச்சரவுகளும் இருக்கும். பணவருவாய் இருந்தாலும் அன்றாடச் செலவுகளுக்கும் குறைவிருக்காது. எடுத்த கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். தேக சுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. உறவினர்களிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றும். விவாக கருமங்கள் தாமத நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு பிரயாசை, அலைச்சல் கூடுதலாக இருக்கும். பணிகளைச் செய்வதில் தாமதம் ஏற்படும். பதவி உயர்வு முதலியன தாமதப்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாக இருக்கும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். வாடிக்கையாளர்களை வரச் செய்வதில் பிரயாசை காட்டும் தொழிலாளர்களுக்கு தொழில் கிடைத்தாலும் இயந்திரக் கோளாறுகளால் வருவாய் மத்திமமாகும். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய ஊக்கம் தேவை.

## சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1 கால்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். பொருளாதார நிலை சிறப்பாக அமையும். வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மை அதிகரிக்கும். கருமங்களில் எதிர்பார்த்தவாறு வெற்றி கிட்டும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். தேகசுகம் பாதிப்படையாது. விவாக சுபகருமங்கள் மனம்போல் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். பதவி உயர்வு சிலருக்கு கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுகளும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், பரீட்சைகளில் சிறப்புச் சித்தியும் கிட்டும்.

## கன்னி

(உத்தரம் 2,3 கால்கள் அத்தம், சித்திரை 1,2 கால்கள்)



கன்னி ராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். தொடங்குங் கருமங்கள் வெற்றியளிக்கும். பொருளாதார நிலைதிருப்தியாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். மங்கள கருமங்கள் விரைவில் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அனுசரணை கிட்டும். பணிகள் சிறப்பாக நடக்கும். மதிப்பும், கௌரவமும் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புகள் அதிகமாகும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

## துலாம்

(சித்தரை 3,4 கால்கள், சுவாதி, விசாகம் 1,2,3 கால்கள்)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மனக் கசப்புகள் அதிகரிக்கும். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்காது. பிரயாசைக் கேற்ற வருவாய் கிடையாது. புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். கடன் தொல்லைகளும் வந்து சேரும். விவாக கருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகளும் வேலைப்பளுவும் அதிகரிக்கும். சக ஊழியர்களின் உதவிகள் கிடையாது. மேலதிகாரிகளின் கெடுபிடிகள் கூடுதலாக இருக்கும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். நிதிப் பற்றாக்குறை நிலவும் புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் குறையும். வருமானம் குறையும். மாணவர்களுக்கு கல்வி நாட்டம் குறையும்.

## விருச்சிகம்

(விசாகம 4 ம் கால், அனுஷம், கேட்டை)



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பம் நன்றாக இருக்கும். எனினும் இடையிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றும். பொருளாதார நிலை ஓரளவு நன்று. தொடங்கும் கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். தேகசுகத்தைப் பேணுதல் நன்று. விவாக கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பயணங்களில் தாமதம் காணும். அலுவலகங்களில் அதிகாரிகள் குற்றம் காண்பர். நிம்மதி குறைவாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. வங்கி உதவிகள் தேவைக்கு வராது. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் மத்திமமாகும். வருமானம் குறையும். மாணவர்களுக்கு முயற்சி கூடுதலாகக்தேவை. முயற்சிக்கேற்ப சித்தி உண்டு.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் கால்கள்)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். பொருளாதார நிலை திருப்திகரமாக அமையும். தேகசௌக்கியம் அதிகம் பாதிப்படையாது. மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு கருமங்கள் சீராக நடக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். முதலீடுகளில் நல்ல லாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்களும், நல்ல வருமானமும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் பரீட்சைகளில் சித்தி உண்டு.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 கால்கள், திருவோணம், அவிட்டம் 1,2 கால்கள்)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மிகச்சிறந்த பலன்கள் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவியிடையே அந்நியோன்யம் சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பொருள் வரவு கிட்டும். வெளிநாட்டிலிருந்து பொருள் வரவு கிடைக்கும். மங்கள கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிட்டும். கௌரவம், மதிப்பு உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் அமோகமாக நடக்கும். அபரிமித லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கும். எதிர்பார்த்த லாபம் உண்டு. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், உயர் கல்வி என்பன சாத்தியமாகும்.

## கும்பம்

(அவிட்டம் 3,4 கால்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 கால்கள்)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் இருந்து கொண்டிருக்கும். தொடங்கும் கருமங்கள் கைகூடுவதில் பல இடைஞ்சல்கள் ஏற்படும். உழைப்புக்கேற்ற வருவாய் கிடையாது. தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். விவாக சுபகருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். சரிவரச் செய்ய சக உதவிகள் கிடையாது. எப்படி கஷ்டப்பட்டு தொழில் செய்தாலும் நன்மை கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். எதிர்பார்த்த லாபம் கிடையாது. நிலுவைகளைத் திரும்பப் பெறுவது கடினம். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு குறையும். இயந்திரங்கள் ஒத்துளைக்காது. வருவாய் குறையும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த சித்தி கிட்டாது.

## மீனம்

(பூரட்டாதி 4 ம் கால், உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் குதூகலமாக இருக்கும். எதிர்பராத பணவரவு வந்து சேரும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி வெற்றியளிக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களின் வரவால் மகிழ்ச்சி கிட்டும். விவாக சுபகருமங்கள் மனம்போல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பு இருக்கும். மதிப்பு கௌரவம் உயரும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். அதிகாரிகள் பாராட்டுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். நிறைந்த லாபம் கிடைக்கும். வங்கி உதவிகள் உண்டு. தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்த வேலை கைச்சாத்தாகும். நிறைந்த லாபமும் கிடைக்கும். மாணவர்கள் பரீட்சைகளில் முன்நிலை வகிப்பர். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப் புகள் கிடைக்கும்.

## விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

### மகரம்



உத்தராடம் 2,3,4
திருவோணம்
அவிட்டம் 1,2

மகரராசியில் அன்பர்களுக்கு இராசிநாதன் சனி 7 ஆம் வீட்டிலும், குருபகவான் 10 ஆம் வீட்டிலும் சஞ்சரிக்கின்றனர். வருட ஆரம்பம் சோதனை தரும் காலமாக அமைகிறது. தொழில் பொருளாதார ரீதியில் பல நெருக்கடிகள் தோன்றும். குடும்பத்திலும் கணவன், மனைவி ஒற்றுமை கேள்விக் குறியாகவே இருக்கும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவும் அதிகரிக்கும். திருமணம் முதலான சுப கருமங்கள் தடைப்படும். பிள்ளைகளால் மனச் சஞ்சலம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினை உண்டாகும். உறவினர்களுடன் கருத்து வேற்றுமைகள் காட்டும். சிலருக்கு வதிவிட மாற்றம் ஏற்படலாம். புத்திரர்களால் செலவும் அதிகரிக்கும்.

28.10.2006 இல் குரு பகவான் லாப ஸ்தானத்துக்கு மாற்றம் பெறுகிறார். அதன் மேல் பல முன்னேற்றமான பலன்களைக் காணமுடியும். முன்பு ஏற்பட்ட சோதனைகள் எல்லாம். படிப்படியாகக் குறையும். தேகநிலை, குடும்ப நிலை சிறப்படையும். மனதில் புதிய உற்சாகம் தோன்றும். கணவன், மனைவியிடையே அந்நியோன்யம் சிறக்கும். புத்திரர் களால் மகிழ்ச்சியும், உதவியும் உண்டு. சிலருக்கு புத்திரரர் பாக்கியம் கிடைக்கும் எடுக்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். தடைப்பட்டிருந்த திருமணப் பலன்கள் கைகூடும். வீடு, காணி, வாகனம் சேர இடமுண்டு. உறவினர்களின் உதவிகள் எச்சந்தர்ப்பத்திலும் கிடைக்கலாம் பொருளாதாரத்தில் இருந்த கஷ்டங்கள் நீங்கும். பெரிய மனிதர்களின் அன்பும், ஆதரவும் கிட்டும். கடன் தொல்லைகள் இருந்தால் அவை மறைந்துபோகும். புகழ் , செல்வாக்கு என்பன கூடும். பிரயாணங்களும் அனுகூலமாக அமையும். மனதில் புதிய திட்டங்கள் உருவாகிச் செயற்படுத்த முடியும். வீட்டில் சுபநிகழ்வுக் கொண்டாட்டங்கள் நிகழும்.

உத்தியோகத்தர்களுக்கு வருட முற்பாதி பல பிரச்சினைகளைக் கொடுக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். சக ஊழியர்களின் உதவிகள் குறையும். வசதிகுறைந்த இடமாற்றங்கள் கிடைக்கும். வருட பிற்பாதியில் உத்தியோக நிலை சிறப்பாக இருக்கும். அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். கந்தோர்களில் கௌரவம் அதிகரிக்கும். குடும்ப நிலைகளும் உயரும். புதிதாக உத்தியோகத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலைகள் கிடைக்கும். வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வருடத் தொடக்கத்தில் வியாபாரம் மந்தமாகவே இருக்கும். முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் தோன்றும். முதலீடுகளுக்கு நிதி பற்றாக்குறையாக இருக்கும். வேலையாட்கள் பற்றியும் அவதானம் தேவை. ஐப்பசி மாதத்தின் மேல் தொழில் சிறப்பாக நடக்கும். பெரிய தொகைகளை முதல் விட்டு அதிக லாபம் பெறமுடியும். வங்கி உதவிகளும் கைகொடுக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் சிறப்பான அனுகூலம் கிடைக்கும். கடந்தகால நஷ்டங்களையெல்லாம் இந்த வேளையில் நிவர்த்தி செய்யலாம்.

பெண்களுக்கு முற்பகுதியில் உடல் நலம் சற்றுத் தளர்வடையும். குடும்பத்தில் நிம்மதி குறைவாக இருக்கும். திருமணச் சம்பவங்கள் இழுபறியைக் காட்டும். ஆரோக்கியக் குறைவுகளும் காட்டும். ஐப்பசி மாதத்தின் மேல் படிப்படியாக முன்னேற்றம் கிட்டும். தடைப்பட்ட திருமணம் கைகூடும். வைத்தியச் செலவுகள் குறையும். குடும்பத்தில் உயர்வும், மகிழ்ச்சியும் கிட்டும்.

மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் கூடிய ஆர்வமும், பரிசுகளும் பெற இடமுண்டு. குறிப்பிட்ட போட்டிகளில் சாதனை நிலை நாட்ட முடியும். மூன்றாம் தவணைக் காலத்தில் கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். பரீட்சைகளில் கூடிய மதிப்பெண்ணும், பாராட்டுக்களும் கிட்டும்.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

# ஏப்ரல் 24 பேச்சில் பங்கேற்க முடியாது...

நோர்வே சிறப்புத் தூதுவர் மற்றும் நோர்வே குழுவினரைச் சந்தித்து இன்றைய எமது நிலைப்பாடுகளை எடுத்து விளக்கியுள்ளோம்.

ஜெனீவாப் பேச்சுக்களில் நாங்கள் பங்கேற்பதற்கான தடைகள் பற்றியும், அரசாங்கமும் படைத்தரப்பும் ஏற்படுத்தியிருக்கின்ற நெருக்குவாரங்கள் மற்றும் நெருக்கடிகளைப் பற்றி விளக்கினோம்.

ஜெனீவாவில் திட்டமிட்ட நாளில் பேச்சுக்களில் நாம் பங்கேற்பதற்கு இயலாத சூழ்நிலையை விளக்கியுள்ளோம். எங்களுடைய நிலைப்பாட்டை கரிசனைக்குட்படுத்துவதாகவும், இது தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிகமாகப் பேசுவதாகவும் கூறியுள்ளனர்.

ஜெனீவாப்பேச்சுக்களுக்குப் பின்னர் துணை இராணுவக் குழுவினராலும், அரச படைகளாலும் தமிழர் தாயகப் பகுதிகளில் வன்முறைகளும், இனப் படுகொலையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பற்றாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் சாதாரண மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகின்றனர்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற இனவன்முறைகள் மற்றும் யாழ். புத்தூர் படுகொலைகள் உள்ளிட்ட சம்பவங்களை விபரமாக விளக்கியுள்ளோம்.

மக்கள் மீதான இராணுவ வன்முறைகள், கெடுபிடிகளைக் கட்டுப்படுத்தாதவரை மக்களது கொந்தளிப்பை நாங்கள் கட்டுப்படுத்துவது கடினமானதாக இருக்கும். இத்தகைய நிலைமையானது போர்நிறுத்தம் இல்லாத ஒரு சூழ்நிலையே என்பதையும் சுட்டிக் காட்டினோம். இந்தச் சூழ்நிலையை உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம்.

நோர்வே குழுவினர் இரு தரப்பையும் வன்முறைகளை நிறுத்துமாறு குறிப்பிட்டார்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை 100 வீதம் கடைப்பிடிக்கவும், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் ஒத்துழைப்பளிக்க எமது தலைமைப்பீடம் தயாராகவுள்ளது.

ஆனால், நிலைமைகளைச் சீர்குலைத்ததும், இந்த மோசமான நிலைக்கும் அரசும், படைகளும் தான் காரணம். ஆகையால், அவர்கள் தரப்பில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நீங்கள் முயற்சித்தால்தான் தமிழ் மக்களின் கொந்தளிப்பான நிலை கட்டுப்பாட்டுக்குள்வரும் என்று தெரிவித்துள்ளோம்.

இருதரப்பும் வன்முறையைக் கைவிட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அவர்கள் கூறினர். நாங்களும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்போடு உள்ளோம் என்பதைத் தெரிவித்தோம். களநிலைமையில் எங்கள் மக்கள் மீது வன்முறைகளையும், கொலைகளையும் கட்டவிழ்த்து விட்டதால் மக்கள் ஆத்திரமுற்று கொந்தளிப்பான நிலையிலுள்ளனர் என்பதே யதார்த்தம். முதலில் தனது மோசமான செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்தம் வேண்டும்.

எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் கிளிநொச்சிக்கு வந்து எமது தலைவரைச் சந்தித்த பின்னர் - இன்றைய நிலைமைகள் பற்றி கலந்துரையாடிய பின்னர் ஜெனீவாப் பேச்சுக்கான தீர்மானங்களை எடுக்கலாம். ஜெனீவாப் பேச்சுக்குப் போவது பற்றிய திகதிகளைத் தீர்மானிக்கலாம். ஆக, முதலில் எமது தலைவரை தளபதிகள் சந்திக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றுதான் வலியுறுத்தியிருக்கிறோம்.

அண்மையில் கடல் போக்குவரத்து ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் எங்கள் தளபதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அசௌகரியங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைப் பற்றி கண்காணிப்புக் குழுவுக்கு முழு விடயத்தையும் எடுத்து விளக்கினோம். இது எங்கள் தலைமைப்பீடத்தை மிகவும் சீற்றமடைய வைத்துள்ளது. கவலையடைய வைத்துள்ளது.

இந்த நிலைமைகள் பாரதூரமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் கிளிநொச்சிக்கு வருவதற்கு 100 வீதம் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதற்கான நடைமுறைகள் பற்றி இன்று விளக்கினோம். ஆகவே, போர் நிறுத்த ஒப்பந்த நடைமுறைகளை மாற்றியமைப்பதை - இதுவரை இருந்த போக்குவரத்து ஒழுங்குகளை மாற்றியமைப்பதை ஒருபோதும் எமது தலைமைப்பீடம் ஏற்றுக்கொள்ளாது.

தனியார் உலங்குவானூர்தி தொடர்பாகவும் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒழுங்கு முறைகள் தொடர்பான எமது சந்தேகங்களை - நடைமுறைச் சிக்கல்களை நோர்வே குழுவிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். நிலைமையை சுமுகமாக்கி அதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் முயற்சிப்பதாக நோர்வே தரப்பினர் கூறியுள்ளனர்.

முன்னர் கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்தவுடனேயே எமது கடல் போக்குவரத்தில் இலங்கைக்கடற்படையினரது பிரசன்னமோ, ஈடுபாடோ இருக்கக் கூடாது என்பதை அன்றே அறிவுறுத்தியிருந்தோம். இதை ஊடகங்களுக்கும் பகிரங்கப் படுத்தியிருந்தோம். அவசரமான போக்குவரத்து என்பதால் கடிதப் போக்குவரத்தை உடன் செய்ய முடியாததால் வாய் மூலமான உத்தரவாதமே பெறப்பட்டிருந்தது.

ஆனால், இது பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு, பிழையான செய்திகளாக வெளியாகியது. இது தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவினருக்கு விளக்கியுள்ளோம். நீங்கள் பிழையாக அர்த்தப்படுத்தியுள்ளீர்கள் என்றும் எடுத்துக் கூறியுள்ளோம். நாங்கள் பேசியதும் நடைமுறையில் நடைபெற்றவையும் முற்றிலும் முரண்பாடானது என்பதையும் கூறியிருக்கிறோம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதிப்பதிலும், அமைதிக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் எப்போதும் நேர்மையாகத்தான் இருக்கிறார்கள். எமது தலைமைப்பீடம் இதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. ஆனால், எமது தாயகப் பகுதிகளில் நிலைமைகளை மோசமாக்கி, குழப்ப வன்முறைகளை ஏற்படுத்தி - ஒரு போர்ச் சூழலை அரசாங்கமும், படையினரும்தான் ஏற்படுத்தி வருகின்றனர் என்பதுதான் உண்மை. புலிகள் மீது குற்றம் சாட்டுவது தவறானது.

ஜெனீவாவுக்குப் போவதற்கு தாங்கள் ஆயுத்தமாகவுள்ளதாகவும், ஜெனீவாவுக்குப் போவதற்கு புலிகளைத் தாங்கள் தூண்டுவதற்கு முயற்சிப்பதாகவும் அறிவித்துக் கொண்டு, மறுபுறத்தில் நிலைமையை மோசமாக்கி ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வதைத் தடுப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற வன்முறைகள், எமது தளபதிகளின் பயண ஒழுங்குகளை முடக்கி எமது தலைமைப்பீடம் முக்கிய முடிவை எடுக்கவிடாமல் முடக்குவது, போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையைப் பேணாமல் இருப்பது என தீவிரமாகச் செயற்படுகிறார்கள்.

பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு முன்னர் அவர்கள் சர்வ கட்சி மாநாடு, கலந்துரையாடல்கள், பட்டறைகள் போன்றவற்றை நடத்தும்போது - எமது பிராந்தியத் தளபதிகளை எமது தலைவர் சந்தித்துப் பேச விடாமல் தடுப்பது எந்தவிதத்தில் நியாயம் என்று கேட்கிறோம். இது முழுமையாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாகவும், ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட நடைமுறைகளுக்கு விரோதமானது. இதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

ஜெனீவாப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டுமானால் இந்த நிலைமைகளைச் சீராக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளோம்.

மக்கள் மீதான தாக்குதல்களால் மக்கள் பொறுமையிழந்தமையால் தான் இராணுவத்தினர் மீதான எதிர்த் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

கண்காணிப்புக் குழுத் தலைவர் கூட புலிகளைச் சந்தேகிப்பதாக ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார். புலிகளும் மக்களும் இணைந்து போராடித்தான் இவ்வளவு வெற்றிகளைப் பெற்று, ஒரு பெரிய நிலப்பரப்பை மீட்டெடுத்து ஒரு பகுதி மக்களுக்காவது நிம்மதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்று அவருக்கு விளக்கியுள்ளோம். மக்கள் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்யப்படும்போது அவர்கள் பொறுமை காத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இத்தனை காலப் போராட்ட அனுபவங்களைக் கொண்டு மக்களும் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வர். மக்களைப் பொறுமையிழக்கச் செய்வது இராணுவமும், அரசும்தான்.

போர்நிறுத்தத்திலிருந்து விலகவோ அல்லது வன்முறையைத் தொடங்கவோ புலிகள் காரணமல்ல. ஆகவே, வன்முறைகள் தொடர்பாகப் புலிகள் உத்தரவாதம் தரமுடியாது. இராணுவம்தான் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவித் தாக்குதலை நடத்துகிறார்கள். முக்கியமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எங்கள் மக்கள் நாளாந்தம் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

எங்கள் மக்கள் மீது இனப்படுகொலையைத் தூண்டிவிட்டு - வன்முறையைத் தூண்டிவிட்டு - வன்முறையை நிறுத்துங்கள் என்று எங்களைக் கோருவது பொருத்தமில்லாத விடயம்.

ஜெனீவாப் பேச்சுக்கோ, அமைதி முயற்சிக்கோ, போர்நிறுத்தத்துக்கோ நாங்கள் விரோதமானவர்கள் அல்ல என்பதை நோர்வே குழுவினருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அரசும், படைகளுமே இப்படியான செயற்பாடுகளை மேற்கொள்கிறவர்கள். ஆகவே, அவர்கள்தான் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்கள் மீதும், எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் ஊடுருவிப் பொதுமக்களைத் தாக்குகிறார்கள். எல்லைக் கிராம மக்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்கிறார்கள். முழுமையாகப் பொதுமக்கள் மீதே கிளைமோர் தாக்குதல்களை படையினரும், ஆயுதக் குழுவினரும் செய்து கொண்டிருக்கிறார்கள். இது வெளிப்படையான உண்மை. அந்த மக்களிடம் நீங்கள் சென்றால் மக்களே உண்மையை விளக்குவார்கள்.

தன்னுடைய குடும்ப வறுமை காரணமாக ஒரு சிறுவன் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்தப் பகுதியில் உழவுஇயந்திரத்தில் சென்று கொண்டிருக்கும் போது - கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவர் எமது அமைப்புடன் இணைந்தவரா? ஆயுதப் பயிற்சி பெற்றவரா? என்பதைப்பற்றி எமது சிறுவர் பாதுகாப்புக்குழு விசாரணை நடத்தி யுனிசெப்பின் தவறான அதிர்ச்சியான அறிக்கைக்கு விளக்கம் கொடுக்கும்.

இலங்கையில் என்ன சம்பவம் நடந்தாலும் புலிகளைக் குற்றம் சாட்டுவது வழமையான மரபாக உள்ளது. இதில் உண்மை நிலைமைகளைக் கண்டறிந்து, அதற்கான காரணங்களைக் கண்டறிவதை விட்டுவிட்டு - புலிகளைக் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தால் அதற்கான விளைவை அவர்கள் சந்திக்கத்தான் போகிறார்கள்.


புலிகள் மீது சந்தேகம் கொள்வதையோ, குற்றம் சாட்டுவதையோ விட்டுவிட்டு உண்மைக் காரணங்களைக் கண்டறியுங்கள் என்று இன்றைய சந்திப்பிலும் வலியுறுத்தியுள்ளோம். ஏன்? யார்? என்ன காரணத்துக்காகச் செய்கிறார்கள் எனக் கண்டறிந்து அதை நிறுத்த வழிசெய்ய வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் குற்றச் சாட்டுக்களிலிருந்து தப்பிக்கவே புலிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் அமைதி முயற்சிகள் ஆகியவற்றைச் சீர்குலைப்பதில் அரசாங்கம் பாரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. ஆயுதக் குழுக்களைக் கொண்டு வன்முறைகளைத் தூண்டுவது, பொதுமக்கள் மீது படைத்தரப்பினர் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுதல் போன்றவற்றின் மூலம் இரண்டையும் அரச தரப்புத் தான் சீர்குலைக்கிறது என்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

# அப்பாவி மக்கள் படுகொலைகள் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம்—

அப்பாவி மக்களை அரசு திட்டமிட்டு படுகொலைகள் சமாதான சூழலை சீர்குலைத்து மீண்டும் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த முனைகிறது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இவர் புத்தூரில் ஐந்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

அரசபடைகள் தமிழ்மக்களை அச்சுறுத்தி பணிய வைப்பது என்ற முயற்சியில் இறங்கியிருப்பதாகத் தோன்றுகிறது. புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறான கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டிய பிரச்சினையை வன்முறைப் போராட்டமாக மாற்றியதே அரசுதான். ஜெ.ஆர். ஜெயவர்த்தனா காலத்திலிருந்து இன்று வரை இராணுவ ரீதியிலான தீர்வைக் காணத்தான் இவர்கள் முயற்சிக்கிறார்கள்.

அரசாங்கம் பேச்சுவார்த்தையில் உறுதியாக உள்ளது. பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளது என்பதெல்லாம் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த எடுத்துவிடப்படும் கதைகளே தவிர அதில் எவ்வித உண்மையும் இருப்பதாகத் தோன்றவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் குண்டு வைக்கிறார்கள். இராணுவத்தை கொலை செய்கின்றார்கள். ஆனால் தாங்கள் பொறுமையாக இருக்கிறோம் என்று அரச தரப்பில் பிரசாரப்படுத்தப்படுகிறது. ஆனால் வடக்கு - கிழக்கில் நடைபெறும் திட்டமிட்ட கொலைகளுக்கும் இன அழிப்புகளுக்கும் அரசபடைகளும் அவர்களுடன் செயற்படும் துணைப்படைகளுமே இதற்குக் காரணமாகும்.

புலிகளைக் கொல்கின்றோம் என்ற பெயரில் அப்பாவி மக்களை கொலைசெய்து வருகின்றனர்.

பேச்சுவார்த்தை எனக் கூறும் அரசு பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்டவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. மாறாக அதற்கு எதிரான செயற்பாடுகளிலேயே தீவிர அக்கறை காட்டுகின்றது.

அரச பயங்கரவாதம் எமது போராட்டத்தைப் பலப்படுத்தியதே அன்றி பலவீனப்படுத்தவில்லை. எனவே அரச படைகளின் இந்தக் காட்டு மிராண்டித்தனமான கொலைகள் தமிழ் மக்களையும் அவர்களது போராட்டத்தையும் வலுவடையச் செய்யும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தநிலையில் நூலிழையில் ஆடிக்கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை முறிவடையாமல் தொடர வேண்டுமென அரசு விரும்பினால் உடனடியாக இவ்வாறான அரச பயங்கரவாதங்கள் நிறுத்தப்பட வேண்டும். அப்பாவிகளை கொலை செய்வது நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் இன்னுமோர் யுத்தத்தை வலிந்து ஏற்படுத்திக் கொள்கிறது என்பதே அர்த்தமாகும். எமது ஜனநாயக பூர்வமான கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டு அரச பயங்கரவாதம் அதிகரிப்பது ஆரோக்கியமானதல்ல.

அரச பயங்கரவாதத்தையும் அப்பாவிகளின் கொலைகளையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் கோப்பாய் வாதரவத்தையிலும் ஏனைய இடங்களிலும் கொல்லப்பட்ட சகோதரர்களின் துயரத்தில் நானும் பங்குகொள்வதுடன் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரக்கங்களையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நமது ஈழநாடு சிறுவர் அரங்கம் - துருவன் நடத்திய

## போட்டி முடிவுகள்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.06

★ முதலாம் பரிசு - செல்வி மேனகா நாகரத்தினம்
யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
(மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 500 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - செல்வன் பொ.பசுந்தமிழன்
யா/ இராமநாதன் கல்லூரி.
(இல.303, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத்தொடர்பகம், முகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு).

★ மூன்றாம் பரிசு - செல்வி துளசி பத்மநாதன்
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
(ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் சுதன் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 200 பணப் பரிசு)

பரிசு பெறும் அதிஷ்டசாலிகளுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் தங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றினைச் சமர்ப்பித்து ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் எமது அலுவலகத்துக்கு வந்து தமது பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- பிரதம ஆசிரியர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமைதி முயற்சிகளில் இருந்து நோர்வே வெளியேற்றப்படும்?

## கொழும்பு ஊடகம் கருத்து

கொழும்பு

இலங்கையின் அமைதி முயற்சிகளில் இருந்து நோர்வே வெளியேற்றப்படலாம் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரை சந்திப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளதாகவும் இது நோர்வேயை வெளியேற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கை என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் ஜனாதிபதி செய்துகொண்ட உடன்படிக்கையின்படி சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை வெளியேற்றுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியைத் தொடருமாறு நோர்வேக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வே அரசாங்கம் - நீண்ட இடைவெளியின் பின்னர் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றை ஜெனிவாவில் நடத்தியிருந்தது.

இதன்போது போர்நிறுத்த ஒப்பந்த நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க இருதரப்பும் இணங்கியிருந்தன.

வடக்கு - கிழக்கில் செயற்படும் துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் இணங்கியபோதும் இதுவரை அதை நடைமுறைப்படுத்தவில்லை.

இந்தநிலையில் இந்த மாதம் நடைபெறஏற்பாடாகியிருந்த பேச்சுக்கு முன்பாக துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும் தமிழ்மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றினால் மட்டுமே அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முடியும் எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.

இதனையடுத்து அரசியல் ரீதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படுவதாக குற்றம் சுமத்தி அவர்களை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ ஆலோசித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதனையடுத்து போர் ஒன்று மூண்டால் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்து நேரடியாக இராணுவ ஒத்துழைப்புக்களைப் பெற்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரப்படுத்த மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதுகுறித்து பேச்சு நடத்துவதற்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று சீனாவுக்கு பயணமாகியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## திருமலை - கன்னியாவில்
# படையினர் சூடு; இளைஞன் பலி!

திருகோணமலை



திருகோணமலை - அநுராதபுரம் வீதியில் உள்ள கன்னியா, 6 ஆம் கட்டைப் பகுதியில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கிரனேட் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை அடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தக் கிரனேட் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர் என்றும், உயிரிழந்த இளைஞனின் சடலத்துக்கு அண்மையில் இருந்து துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் ரவைகளுடன் கூடிய மகசீன் ஒன்றை தாம் கைப் பற்றியுள்ளதாகவும் படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத் அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருகோணமலை - அநுராதபுரம் பிரதான வீதியூடான போக்குவரத்து பிற்பகல் 2 மணிவரை தடைப்பட்டிருந்தது. (04,10)

# பருத்தித்துறை நகரில் அடிக்கடி பறந்த ஹெலி!

யாழ்ப்பாணம்

பருத்தித்துறைப்பகுதியில் நேற்று 4 தடவைக்கு மேல் ஹெலிகள் பறந்ததால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டது.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் நகரப்பகுதியில் ஹெலி பறந்த வேளை, வீதியிலும் பவள் கவச வாகனம் சகிதம் அதிகளவு படையினர் குவிக்கப்பட்டு வீதிச்சோதனைகளில் ஈடுபட்டனர்.

சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் காலை வேளை யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் பயணிப்பதற்காக பருத்தித்துறையில் காத்திருந்த இளைஞர்கள் சிலரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை நகரில் ஹெலியின் பறப்பும், அதிகரித்த சோதனை கெடுபிடிகளும் தற்போது ஏற்பட்டு வருகின்ற அசாதாரண சூழ்நிலையில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது.

எனினும், ஹெலி பறப்புக்கான காரணத்தை இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லை. (12)

# புத்தூரில் கொல்லப்பட்ட இளைஞர்களின் இறுதி நிகழ்வு!

யாழ்ப்பாணம்

புத்தூர் கிழக்குப் பகுதியில் கொலை வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் இருந்த இடத்துக்கு அருகில் படையினரின் காவலரண் இருப்பதால் - படையினரே இந்தக் கொலையை செய்திருக்கலாம் என அந்தப்பகுதி மக்கள் கருதுகின்றனர்.

அத்துடன்,சடலம் மயானத் துக்கு எடுத்துச் செல்லப்பட்ட வழியிலே அந்தக் காவலரண் அமைந்திருந்ததால் படையினருக்கும் மக்களுக்கும் இடையில் ஏதேனும் முறுகல் நிலை ஏற்படலாம் என்ற அச்சம் காணப்பட்டது.

இதனால் இந்தச் சடலங்கள் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வழித்துணை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பருத்தித்துறை வீதியில் - புத்தூர் சந்தியிலிருந்து வங்கியடி வரையும் படையினர் குவிக்கப் பட்டிருந்தனர்.

அதிகளவில் படையினரின் நடமாட்டம் காணப்பட்டதால் அந்தப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3மணிவரை பதற்றமான சூழ்நிலை உருவாகி இருந்ததுடன் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

இதேவேளை, புத்தூர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (90)

### சுழிபுரம்...

பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மீன் வியாபாரி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் சுழிபுரம் - கல்லை வேம்படியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தவசி தவச்சந்திரன் (வயது 35) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக கிராம அலுவலர் - பொலிஸாருக்கும் நீதிவானுக்கும் தகவல் தெரிவித்ததையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை செய்து சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (48)

### 2 இளைஞர்கள்...

டிருந்ததுடன், வாய்களில் பிளாஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. இந்த சடலங்கள் யாருடையவை என்ற விபரமோ, இவர்களை யார் கொலை செய்தார்கள் என்றோ தெரியவில்லை.

இந்தச் சடலங்களை பொதுமக்கள் நேற்று காலை 6 மணியளவில் கண்டுள்ளனர். இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரிவிக்கப் பட்ட போதிலும் - காலை 8.45 மணி வரை சம்பவ இடத்துக்கு அவர்கள் எவரும் வரவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவரின் காலுக்கு அடியிலிருந்து வவுனியா -புதுக்குளம் தமிழ் தேசியப்படை என அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரம் கண்டெடுக்கப் பட்டது.

வவுனியா நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலுமிருந்து இந்த வாரத்தில் மாத்திரம் இதுவரை 6 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

# கிழக்கில் 3 இடங்களில் கிளைமோர் தாக்குதல்

மட்டக்களப்பு

கிழக்கில் மூன்று இடங்களில கிளைமோர் தாக்குதல்கள் நேற்று நடத்தப்பட்டன. இதில் படையினர் இருவர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு என்ற இடத்தில் படையினரின் வாகனத்தை இலக்குவைத்து நேற்றுக் காலை 8 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், இலக்கு தவறியதால் 15 இராணுவத்தினர் உயிர் தப்பினர்.

இதையடுத்து மட்டக்களப்பு - கல்முனை வீதி மூடப்பட்டது. அந்த வீதி வழியாகச் சென்றவர்கள் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் தாக்கப்பட்டனர்.

அதேவேளை, மட்டக்களப்பிலிருந்து தென்கிழக்கில் 11 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படையினர் எவரும் பாதிக்கப் படவில்லை.

மட்டக்களப்பிலிருந்து வடமேற்கில் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஊறணியில் பொலநறுவ நோக்கிச் சென்ற இராணுவ லொறி முற்பகல் 11 மணியளவில் கிளைமோர் தாக்குதலில் சிக்கியது. இதில் இரு படையினர் படுகாயமடைந்தனர்.

# பதவியா பகுதியிலும் கிளைமோர் தாக்குதல்

அநுராதபுரம்

அநுராதபுரம் - பதவியா அபிமானபுர பிரதேசத்தில் நேற்றுக் காலை இரண்டு கிளைமோர் குண்டுகள் வெடித்தன.

படையினர் வழமையான வீதிச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது பதவியா - கெப்பிட்டிக்கொலாவ வீதியில் அபிமானபுர 13 ஆவது மைல் கல்லுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான பொருள் ஒன்றை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அனைவரையும் தரையில் படுக்குமாறு அறிவிக்கப் பட்டதையடுத்து அனைவரும் தரையில் படுத்தனர்.

சிறிது நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு கிளைமோர்க் குண்டுகளும் வெடித்தன.

எனினும், இதில் படைத்தரப்பினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

# தம்பலகாமம் வயலில் இளைஞர் சுடப்பட்டு காயம்!

திருகோணமலை

திருகோணமலை - தம்பலகாமம் 98 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள வயலொன்றில் வைத்து சிவராஜா சிவகுமார் (வயது 29) என்ற தமிழ் இளைஞர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தமது வயலில் இருந்த வேளை இந்த இளைஞர் சுடப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை கேட்டவர்கள் தெரிவித்த தகவலையடுத்து அங்கு சென்றவர்கள் படுகாயமடைந்திருந்த இளைஞரை முதலில் தம்பலகாமம் வைத்தியசாலையிலும், அதனையடுத்து அங்கிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலையிலும் அனுமதித்தனர்.

தற்போது உயிராபத்தான நிலையில் மேற்படி இளைஞன் திருமலை பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர் சுடப்பட்டதற்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. (10,4)

### கிளைமோர் தாக்குதல்...

தங்கள் அலுவலகத்துக்கு நேரடியாக வந்து எம்மை அடையாளப்படுத்தியும் இருந்தோம். இன்றும் தயாராகவே இருக்கிறோம்.

ஆனாலும் ஜெனிவா பேச்சின் பின்னரும் தமிழ்மக்கள் எம்மீது இராணுவம் தனது கொலைவெறியைக் காட்டியது. திருமலை மக்கள் பேரவை தலைவர் விக்னேஸ்வரன் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்.

எனவே நாம் மீண்டும் தாக்குதல்களைத் தொடங்கிவிட்டோம். எனவே எம்மை மன்னிக்கவும். விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் பழியை போடுவதனூடாக அரசுக்கு துணை போகும் அவர்களது படுகொலைகளை நியாயப்படுத்த வேண்டாம் என வேண்டிக்கொள்கிறோம்.

நேற்றுமுன்தினம் கூட எமது ஐந்து உறவுகளை புத்தூர் பகுதியில் படையினர் கொலைசெய்துள்ளனர்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் கிளைமோர், கண்ணி வெடித் தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்ற தங்களது கருத்தை நாம் மறுப்பதோடு அந்தத் தாக்குதல்களுக்கு நாம் வெளிப்படையாக உரிமை கோருகிறோம் என்பதையும் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

அத்துடன் தாங்கள் விரும்பினால் மீண்டும் நாம் வெளிப்படையாக சந்திக்க என்றும் தயாராக இருக்கின்றோம் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரச கட்டுப்பாட்டுப்...

படம்பிடித்துள்ளதுடன், அவர்களிடம் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளார்.

அரோன் லூயின்ஸ் சென்ற முகாமில் சுமார் 30 பேர் வரையில் இருந்ததாகவும், அவர்களிடம் ஏ.கே 47 ரக இலகு இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் ரொக்கட் லோஞ்சர்கள் என்பன இருந்ததாகவும் அந்த விபரணப்படத்தில் காண்பிக்கப்பட்டது.

அத்துடன், அங்குள்ள ஆயுததாரிகள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் காண்பிக்கப்பட்டது.

இந்த விபரணப்படத்தில் செவ்வி வழங்கிய கருணா குழுவின் அரசியல்துறைப் பொறுப்பாளராக தன்னை அடையாளப்படுத்திய பிரதீப் என்பவர் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு தாங்களே காரணம் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த முகாம் குறித்து அவுஸ்ரேலிய ஊடகவியலாளர் ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரித்த போது - தமக்கு இந்த முகாம் குறித்து எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

அரசாங்க கட்டுப்பாட்டு பகுதியில் எந்த விதமான ஆயுதக்குழுக்களும் செயற்படவில்லை என்றும் கோத்தபாய ராஜபக்ஷ அந்த செய்தியில் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விபரணத்தின் முடிவில் கருத்து வெளியிட்ட அரோன் லூயின்ஸ் - கிழக்குப் பிராந்தியத்தில் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதியில் செயற்படும் துணை ஆயுதக் குழுக்களால் சமாதான முயற்சிகளுக்கு மிகவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எச்சரித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் போலித்தனத்தை இந்த விபரணம் மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (01)

### ஈ.பி.டி.பி...

உயிரிழந்தார். இவரது சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது.

இறந்தவரின் தலைப்பகுதியில் ஆறு துப்பாக்கி சூட்டு காயங்கள் இருப்பதாகவும் தாக்குதலுக்கு 9 எம். எம் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதில் நீதிவான் சின்னராசா சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார்.

ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினரான கரன் மத்திய கிழக்கில் 2 ஆண்டுகள் இருந்து விட்டு மீண்டும் வந்து ஈ.பி.டிபியில் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.04.2006 அன்று பொன்னையா குருகேஸ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.